Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 185

திங்கட்கிழமை
30 மே 2022

வைகாசி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 50/=

முச்சந்தி முரளி




## மஹிந்த மீது எந்தநேரமும் தாக்குதல் நடக்கலாமாம்!

புலனாய்வுத் தகவலால் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, மே 30
முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச மீது எந்தநேரமும் தாக்குதல் நடத்தப்படலாம் என புலனாய்வுப் பிரிவு தக 15

## பொருளாதார நெருக்கடிக்கு உடனடித் தீர்வுகளில்லை

- ரணிலின் விசேட உரை: மக்களுக்கு ஏமாற்றம்
- 'சிஸ்டம் சேஞ்ச்' தொடர்பில் நீண்டகாலத்திட்டங்கள் முன்வைப்பு

கொழும்பு, மே 30
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு நேற்று இரவு ஆற்றிய உரையில், பொருளாதார நெருக்கடிக்கான உடன 14



### 13ஆம் திருத்தம் இருப்பதால்

# நிறைவேற்றதிகாரத்தை ஒருபோதும் நீக்கக்கூடாது!

### மீண்டும் இனவாதம் கக்குகிறது அஸ்கிரியபீடம்

கொழும்பு, மே 30
13 ஆவது திருத்தச்சட்டம் நடைமுறையிலுள்ளது. அதன் அச்சுறுத்தல் நிலைமை அனைவருக்கும் தெரியும். எனவே, பெயரளவிலான ஜனாதிபதி முறைமை உருவானால் அது பாதகமாக அமையக்கூடும். எனவே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்கப்பட வேண்டும்– இவ்வாறு இலங்கையின் முக்கிய பௌத்த பீடங்களில் ஒன்றான அஸ்கிரிய பீடம் வலியுறுத்தியுள்ளது. 15

## மீனவர்களுக்கு ம.எண்ணெய் விநியோகம் 3 ஆம் கட்டம் அடுத்தவாரம்!

யாழ்ப்பாணம், மே 30
யாழ். மாவட்ட மீனவர்களுக்கு அடுத்த கட்ட மண்ணெண்ணெய் விநியோகம் இந்த வாரம் இடம்பெறும் 14

## கஞ்சா விவகாரம்: கடத்தப்பட்டவர் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 30
பலாலி உப பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அந்தோனிபுரத்தில் கடந்த 26ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் 3 மோட்டார் சைக்கிளில் வந்த 6 பேர் அடங்கிய குழுவால் 20 வயதான இளைஞன் கடத்திச் செல்லப்பட்டாரெனபொலிஸில் முறைப்பாடு செய் 13

## ஜனாதிபதி முறைமையை இப்போது நீக்கவே முடியாது

இப்படிச் சொல்கிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, மே 30
தற்போதைய சூழ்நிலையில், சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல முடியாது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டுமானால் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த நேரிடும். எனவே, அதற்கு வழிவகுக் 15

## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமை: நீக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்!

நாட்டு மக்களுக்கான உரையில் பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 30
நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படும். அதற்கான கால எல்லை 13

## பலாலி விமான நிலையத்தை மூடும் திட்டம் எதுவுமில்லை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 30
பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை மூடும் திட்டம் எதுவுமில்லை என்று பிரதமர் ரணில் 13

## சிறுப்பிட்டி விபத்தில் இளைஞர் சாவு!

யாழ்ப்பாணம், மே 30
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகாமையில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் படுகாயங்களுடன் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்தில், நல்லூர் நாயன்மார்கட்டைச் சேர்ந்த 14

## திருடர்களைக் காக்கும் 'டீல்' அரசியல் வேண்டாம்

மருத்துவபீட மாணவர்களும் போராட்டம்
பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டு வீச்சு

கொழும்பு, மே 30
திருடர்களைக் காக்கும் 'டீல்' அரசியல் வேண்டாம். மக்கள் ஆணைக்கு மதிப்பளி! ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் உடன் 13

## தமிழக உதவிகள் இன்றே விநியோகம்

யாழ்ப்பாணம், மே 30
தமிழக அரசின் அரிசி மற்றும் பால்மா அடங்கிய உதவிப் பொதிகளில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டவற்றில் முதல் தொகுதி ரயில் 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வடக்கின் அபிவிருத்திக்கு இந்திய முதலீட்டாளர்கள்

## யாழ். இந்தியத் துணைத் தூதுவர் வாக்குறுதி



**யாழ்ப்பாணம், மே 30**

**வடக்கு மாகாணத்தைப் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்வதற்காக, இந்திய முதலீட்டாளர்கள் அழைத்து வரப்படுவர் என்று யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துதரகத்தின் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜேபாஸ்கரன் தெரிவித்தார்.**

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; யாழ். மாவட்ட மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கு மண்ணெண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரியப்படுத்தினர்.

அதனால் நாம் அதனை இலவசமாக வழங்கியுள்ளோம்.

கொழும்புதுறைமுகத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பெரும் சவாலுடன் மண்ணெண்ணெய் எடுத்துவரப்பட்டது.

இந்திய அரசாக இருந்தாலும், தமிழக அரசாக இருந்தாலும் வடக்கு வாழ்மக்களுக்கு உதவி செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம். வடக்கு மாகாணத்தைப் பொருளாதார ரீதியில் அபிவிருத்தி செய்து இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன -என்றார். (க-125)

# இந்திய உதவிகளை மேலும் எதிர்பார்க்கின்றது இலங்கை!

கொழும்பு, மே 30

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்காக, இந்தியாவிடமிருந்து மேலும் பல உதவிகளை இலங்கை கோரியுள்ளது.

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்த, இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார் என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வேலைத்திட்டம் இறுதி செய்யப்படும் வரையில், இலங்கை எதிர்நோக்கும் நிதி நெருக்கடியை சமாளிக்க உதவுமாறு அவர் கோரியுள்ளார்.

அத்தியாவசிய வர்த்தகப் பொருள்கள் மற்றும் எரிபொருள் உட்பட கொடுப்பனவுத் துறையிலுள்ள பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்கு, இந்தியாவால் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டத்தை அதிகரித்தல் மற்றும் மறுசீரமைத்தல் என்பன தொடர்பில் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (ம)

# பொருளாதாரப் பிரச்சினைக்கு நிலையான தீர்வே அவசியம்!

## மக்கள் விடுதலை முன்னணி சுட்டிக்காட்டு

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைக்கு நிலையான தீர்வு வழங்கப்படவேண்டும் என்று மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்தியுள்ளது.

பிரச்சினைகளுக்குத் தீர்வாக குறுகிய நோக்கத்துடன் தீர்மானங்களை எடுப்பது நாட்டின் நிலைமையை மேலும் மோசமாக்கும் என்று அந்தக் கட்சியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கத்தில் பதவியேற்று நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கட்சியின் ஆதரவாளர்கள் பலர் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், குறுகியகாலத் தீர்வுகள் மூலம் பெரும் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது.

பல தசாப்தங்களாக ஏற்பட்டுள்ள மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மக்களை எவரும் வந்து காப்பாற்றப் போவதில்லை. அரசியல்வாதிகளின் பொய்ப் பரப்புரைகளில் சிக்கிக் கொள்ளாமல் பொறுப்புள்ள கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் -என்றார். (எ-இ)

# சீனாவின் அவசரகால டீசல் பேச்சை ஆரம்பிக்கப் பணிப்பு

சீனாவின் அவசரகால டீசல் விநியோகத்தை மீண்டும் செயற்படுத்துவதற்காக சீனாவுடன் கலந்துரையாடல்களை ஆரம்பிக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

அவசரகாலத் தேவைக்காக டீசல் இருப்புக்களை வழங்குவதற்கு சீனா வழங்கிய சலுகைக்கு இலங்கை பதிலளிக்கவில்லை எனத் தெரியவந்ததை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்பதற்கு முன்னர் இந்தச் சலுகை வழங்கப்பட்டிருந்தது. சிங்கப்பூரிலுள்ள கையிருப்பில் இருந்து டீசலை வழங்க சீனா இணக்கம் தெரிவித்திருந்தது. ஆயினும் அதற்கு இலங்கை பதிலளிக்கவில்லை.

அதேவேளை, சீன எக்சீம் வங்கி மற்றும் சீன அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் நிலுவைக் கடன்களை திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைப்பது தொடர்பாகவும், இலங்கையின் நிதி அமைச்சகத்திடம் இருந்து எந்தப் பதிலும் சீனாவுக்கு வழங்கப்படவில்லை. (எ-இ)

# பொலிஸாரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை அவர்கள் சட்ட ரீதியாக நிறைவேற்றவேண்டும். அவ்வாறு செயற்படும் அனைவரது பாதுகாப்பையும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் உறுதிப்படுத்துவேன் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் பொலிஸ் அதிகாரிகளுடன் நடந்த சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடும் போது எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பில் உரிய நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். பொலிஸாரால் கட்டுப்படுத்தமுடியாத பெரும் நெருக்கடிகள் ஏற்படும் போது முப்படையினரின் உதவிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் -என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# இலங்கையில் இருக்க அச்சம் இந்தியாவுக்கு கூட்டிச்செல்லுங்கள்!

## கதறும் முன்னாள் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, மே 30

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படாததால் தன்னையும், தனது குடும்பத்தினரையும் இந்தியாவுக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க இந்தியப் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்புத் தொடர்பில் திருப்தியடைய முடியவில்லை என்று தெரிவித்துள்ள விமலவீர, அரசியல் ஊடாக ஒரு ரூபா கூடச் சம்பாதிக்கவில்லை என்றும், உழைத்துச் சம்பாதித்த சொத்துக்கள் அனைத்து முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதால் இன்று வீடற்றவனாக மாறியுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# சஹ்ரானின் மனைவியிடம் ஆவணங்கள் கையளிப்பு

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பிரதான குண்டுதாரியான சஹ்ரான் ஹாஷிமின் மனைவிக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ், சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ள குற்றப் பத்திரிகை தொடர்பிலான இணைப்பு ஆவணங்கள் அனைத்தும் தமிழ்மொழி மூலம் நேற்றுமுன்தினம் அவரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த வழக்கு கல்முனை மேல் நீதிமன்ற நீதிவான் ஜயராம் ட்ரொக்ஸி முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே மேற்படி ஆவணங்கள் அவரிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த தவணையின்போது சஹ்ரானின் மனைவியின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, பிரதிவாதிக்கு எதிராக சான்றாக முன்வைக்கப்படும் அவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சிங்கள மொழியில் உள்ளதால், அதன் தமிழ் மொழிபெயர்ப்பு அவசியம் என நீதிமன்றில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதற்கமைய குற்றப்பத்திரத்தின் இணைப்பு ஆவணங்கள் சிங்கள மொழியில் காணப்படுவதால் அவை தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்படல் வேண்டும் எனவும், அப்போதே பிரதிவாதிக்கு தன் பக்க நியாயங்களை முன்வைக்க முடியுமாக இருக்கும் எனவும் சஹ்ரான் ஹாஷிமின் மனைவியின் சட்டத்தரணியால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதன்படி கடந்த தவணையில் நீதிமன்றம் விடுத்த உத்தரவுக்கு அமைய பிரதிவாதியான சஹ்ரானின் மனைவிக்கு எதிரான குற்றப்பத்திரத்தின் இணைப்புக்களின் தமிழ் மொழிபெயர்ப்பு, குறித்த வழக்கு விசாரணையின்போது அரச சட்டத்தரணி மாதினி விக்னேஸ்வரனால் எதிர்த்தரப்பு சட்டத்தரணியிடம் கையளிக்கப்பட்டது.

ஜூலை மாதம் 21ஆம் திகதிக்கு இந்த வழக்கு மீண்டும் தவணையிடப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21 ஆவது திருத்தம் என

# இருப்பதையும் பிடுங்காதீர்



## மனோ கணேசன் ஆவேசம்

**கொழும்பு, மே 30**

**21 ஆவது திருத்தம் என்ற போர்வையில், மாகாணசபைகளையும் தேர்தல் முறைமையையும் மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவுள்ளன. இதை நானோ , இதர சிறுபான்மைக் கட்சி களோ அனுமதிக்கவேமாட்டோம் என்று தெரிவித்தார் தமிழ் முற் போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மாகாணசபை முழுமையான அதி காரப் பரவலாக்கல் தீர்வல்ல. ஆனால், குறைந்தபட்சமாக இருக்குமதையும் வெட்டிக்கு றைக்க வேண்டுமென சிங்கள கட்சிகள் கூறுகின்றன. அதே போல் குறைந்தபட்சமாக தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளை நாடாளு மன்றம், மாகாணசபைகள் ஆகிய வற்றுக்குச் செல்ல வழிகாட்டும் விகிதாசார தேர்தல் முறைமை யையும் மாற்றவேண்டும் என்ற குரல்கள் தெற்கில் எழுகின்றன. இது தொடர்பில் தமிழ் பேசும் மக் களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் விழிப்பாக இருக்கவேண் டும்.

21ஆவது திருத்தம் என்று சொல்லி, நிறைவேற்று ஜனாதிபதி முறையை அகற்றினால், 13ஆம் திருத்தம், தேர்தல் முறை ஆகியவையும் மாறவேண்டும் என இங்கே பலர் சொல்லத் தொடங்கியுள்ளார்கள். தென்னிலங்கை சிவில் சமூகத் துக்கு நல்லாட்சி, சுயாதீன குழுக் கள், நீதிமன்ற சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஊழல் எதிர்ப்பு போன்ற பல்வேறு முன்னுரிமை பிரச்சி னைகள் தொடர்பாக தேசிய கோரிக்கைகள் உள்ளன.

இவற்றை நாங்களும் கடுமை யாக ஆதரிக்கின்றோம். அதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. ஆனால், எங்களது முன்னுரிமை பிரச்சினைகள் வேறு. ஒரே நாட் டுக்குள் வடக்கு- கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு, மலையகத்தில் அதிகாரப் பகிர்வு, தோட்ட குடியிருப்புக்களை தேசிய நிர்வாக வலையமைப்புக் குள்கொண்டுவரல், மொழிஉரிமை, மத வழிபாட்டு உரிமை, வடக்கு- கிழக்கில் காணி பிடிப்பு, பௌத்த மயமாக்கல், பயங்கரவாதத்தடுப்புச் சட்டம், அரசியல் கைதிகள், காணா மற்போனோர் விவகாரம் என்று பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. தேசிய கோரிக்கைகளை ஆதரிக் கும் அதேவேளை, எமது பிரச்சினை களையும் நாம் களத்துக்கு கொண்டுவரவேண்டும். எமது பிரச்சினைகளுக்கு நாம் முன்னு ரிமை கொடுக்கவேண்டும்.

எனவேதான், ஜனாதிபதி முறை மையை முழுமையாக அகற்று கிறீர்களோ இல்லையோ, 13ஆம் திருத்தம், தேர்தல் முறை இவற் றில் கைவைக்க ஒருபோதும் இணங்கமாட்டோம். இருப்பதை யும் இழக்க இணங்கமாட்டோம். பழைய பிரச்சினையைத் தீர்க்கப் போய், புது பிரச்சினைகளை உரு வாக்காதீர்கள் - என்றார். (ம)

## மஹிந்தவிடம் வாக்குமூலம்!

கொழும்பு, மே 30

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திட லிலும், அலரி மாளிகை அருகிலும் நடந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் வாக்கு மூலம் பெறுவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மா னித்துள்ளது.

முன்னாள் அமைச்சர்களான நாமல் ராஜபக்ச, ரோஹித அபே குணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர் னாண்டோ மற்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரண ஆகியோரிடமும் வாக்குமூலம் பெறப்படவுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வில் முன்னிலையாகவேண்டும் என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட் டுள்ளது. அதேவேளை, அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்கசேனாதிபதி இன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வுக்கு அழைக்கப்பட்டுள்ளார். மே 9 கலவரம் தொடர்பில் மஹிந்தவிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னதாக வாக்குமூலம் பதிவுசெய் திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

'21' திருத்தம் தொடர்பில்

## ஆளுங்கட்சிக்குள் முரண்பாடு: ஜனாதிபதியுடன் நாளை பேச்சு

கொழும்பு, மே 30

அரசமைப்பின் 21ஆவது திருத் தச் சட்டவரைவு தொடர்பில் பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, நாளை மாலை சந்தித்துப் பேச்சு நடத்த வுள்ளார். இரட்டைக் குடியு ரிமை உடையவர்கள் நாடாளு மன்றம் வருவதைத் தடுக்கும் ஏற்பாட்டை பெரமுனவின் நிறுவு நரான பஸில் ராஜபக்சவின் சகாக்கள் எதிர்க்கின்றனர்.

இந்தநிலையிலேயே ஆளுங் கட்சிக்குள் ஒருமித்த நிலைப் பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள் ளது. (ம-22)

மே 9 கலவரம்

## சந்தேகநபர்களுக்கு நாளை அடையாள அணிவகுப்பு

கொழும்பு, மே 30

கடந்த மே மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற கலவரம் தொடர் பான விசாரணைகள் இடம் பெற்றுவரும் நிலையில், அடை யாள அணிவகுப்பு நாளை இடம்பெறவுள்ள[illegible] பொலிஸ் அத்தியட்[illegible] தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்த வழக்குக்கு சட்டமா அதி பரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இடம்பெறவுள்ளது. கலவ ரத்தில் கைதுசெய்யப்பட்ட சந் தேகநபர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 27ஆக அதிகரித் [illegible] ளார். (ம-14-இ)





**பெ**ரிய பெரிய வருத்தங்களுக்குத்தான் மருந்துத்தட்டுப்பாடு எண்டு எல்லாரும் நினைச்சுக் கொண்டிருக்கிறம். ஆனால் கொஞ்சம் றோட்டில இறங்கி, பார்மஸியளுக்கு போய் ஏதும் ஒரு மருந்து இருக்கோ? எண்டு விசாரிக்கேக்கதான் உலகமே தலைகீழாச் சுத்துறமாதிரி, ' இப்ப அந்த மருந்து வாறேலை' எண்டு ஒரே மாதிரிப் பதில் வருகுது.

அதிலையும் சின்னப்பிள்ளையளுக்கு அடிக்கடி தேவைப்படுற 'பனடோல் சிறப்' மருந்துக்கும் கிடைக்குதில்லை. அந்த சிறப் இல்லாததால சின்னக்காய்ச்சல் எண்டாலும், பிள்ளையைத் தூக்கிக்கொண்டு பெற்றோர் ஹொஸ்பிட்டலுக்கு ஓடவேண்டியிருக்கு.முந்தி யெண்டால், காய்ச்சல் அடிச்சாலும் 'பனடோல் சிறப் குடுத்துப் பார்ப்பம். அதுக்கும் சரிவராட்டி ஹொஸ்பிட்டலுக்குப் போவம்' எண்டதுதான் பெற்றோரின்ர முடிவா இருந்திச்சு. அப்பிடி பனடோல் சிறப் குடுத்ததோட காய்ச்சல் பறந்துபோற சான்ஸ்கூட. ஆனால் இப்ப அப்பிடியெல்லாம் செய்ய ஏலாத நிலைமை. சின்னதா காய்ச்சல் அடிச்சாலும் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோய்த்தான் ஆகோனும். டெங்கு வேற கடுமையா நடக்குது. இந்த நிலைமை யில, பெற்றோல் தட்டுப்பாடு, விலையேத்தம் எண்டு ஆஸ்பத்திரிக்கு போய்வாறதே இப்ப பெருஞ் செலவுதான்.

பனடோல் சிறப் மட்டுமில்லை, பெரியாக்கள் சும்மா தலையிடிக்கு பாவிக்கிற கோடாலித்தைலம் பார்மஸியளுக்கு வந்தே மூண்டு மாதத்துக்கு மேலயாம். இப்ப கோடாலித்தைலம் எண்ட பொருளே பார்ம ஸியளில இல்லை. இப்பியடியே போனால், கொஞ்சநாளில எல்லாப் பார்மஸியளையும் மூடுற அளவுக்கு மருந்துத் தட்டுப்பாடு கடுமையா வருமெண்டு பேச்சடிபடுகுது.

ஒரு நாலைஞ்சு மாசத்துக்கு முதல், பிரைவேட் ஆஸ்பத்திரியளுக்கு , ரிப்ரொப்பா வெளிக்கிட்டு மெடிக்கல் ரெ.ஃப் எண்டு சொல்லுற, மருந்துப் பொருள்களை விக்கிற கொம்பனியளின்ர பிரதி நிதியள் படையெடுப்பினம். மற்ற கொம்பனி மருந்தை விட்டிட்டு தங்கட கொம்பனி மருந்தை எடுத்து, நோயாளர்களுக்கு குடுக்கச் சொல்லி மார்க்கெட்டிங் பண்ணுவினம். இப்ப அப்பிடி மெடிக்கல் ரெ.ஃப்மாரை காணவும் கிடைக்கு தில்லை எண்டு பிரைவேட் ஹொஸ்பிட்டல் காரர் ஏங்குகினம். மருந்துகளை போட்டி போட்டு வித்த கொம்பனியள் எல்லாம், இப்ப மருந்துகள் வராததால தங்கட ஊழியர் மாரை வேலைக்கு வரவேண்டாம் எண்டு சொல்லிட்டினம். மருந்து இல்லாமல் அதை விக்குறது எதுக்கு ரெ.ஃப்? எண்டது நியாயம் போல. ஆனால் இதால கை நிறைய சம்பா திச்ச கனபேர் வேலையே இல்லாமல் வீட்ட இருக்கிறதெண்டது எவ்வளவு பெரிய பரிதாபம். நடக்கிற எல்லாத்தையும் பாக்க பயம் தான்வருகுது. இப்ப பெற்றோல், டீசலுக்கு வரிசையில நிக்கிறமாதிரி ரண்டு, மூண்டு மாதத்தில மருந்துகளுக்கும் லைன்ல நிக்கப்போறம் போல.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் பதுக்கினால் கைதுசெய்ய நடவடிக்கை

## நாடளாவிய ரீதியில் தேடுதல் தீவிரம்

**முல்லைத்தீவு, மே 30**

**எரிபொருளைப் பதுக்கிவைத்து விற்பனை செய்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ள பொலிஸார், அதுதொடர்பாக நாடளாவிய ரீதியில் சிறப்பு வேலைத்திட்டங்களையும் முன்னெடுக்கவுள்ளனர்.**

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பற்றாக்குறைக்கு இத்தகைய பதுக்கல் வியாபாரமும் ஒரு காரணம் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நிலையிலேயே எரிபொருள்களை சட்டவிரோதமாகப் பதுக்கிவைத்து விற்பனை செய்தால் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் பாரபட்சம் இல்லாமல் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

> **“எரிபொருள்களை சட்டவிரோதமாகப் பதுக்கிவைத்து விற்பனை செய்தால் அவர்கள் கைதுசெய்யப்படுவார்கள் என்றும் பாரபட்சம் இல்லாமல் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள்”**

வடக்கு மாகாணத்திலும் இவ்வாறு எரிபொருளைப் பதுக்கிவைத்திருந்து விற்பனை செய்பவர்களைக் கண்டறியப்பட்டு வருகின்றனர். புதுக்குடியிருப்பு - வசந்தபுரம் பகுதியில் கடந்த 25ஆம் திகதி டீசல் பதுக்கி விற்பனை செய்த நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் வர்த்தக நிலையமொன்றில் சட்ட விரோதமாகப் பெற்றோல் மற்றும் டீசலைப் பதுக்கிவைத்து, அதிக விலைக்கு விற்பனை செய்து வந்ததாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார். அதனையடுத்து அவரிடமிருந்து 226 லீற்றர் எரிபொருள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதைவிட சுன்னாகம் பொலிஸ் பிரிவில், ஆயிரத்து 670 லீற்றர் மண்ணெண்ணெய், 310 லீற்றர் பெற்றோல், 200 லீற்றர் டீசல் என்பவற்றைப் பதுக்கிவைத்து விற்பனை செய்த நபரொருவரும் கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-14-19)



## ரயில் கட்டணம் அதிகரிப்பு: விரைவில் கலந்துரையாடல்

கொழும்பு, மே 30

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு இலங்கை ரயில் சேவைகளில் உள்ள பிரச்சினைகள் மற்றும் கட்டணங்கள் அறவீடு தொடர்பில் அடுத்த வாரம் போக்குவரத்து அமைச்சருடன் கலந்துரையாடப்படவுள்ளது என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனினும், விலை அதிகரிப்பு ரயில் பயணிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் போக்குவரத்து அமைச்சரிடம் முன்மொழிவுகளை வழங்க அதிகாரிகள் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-ய)

## பாடசாலைச் சேவைகளுக்கு டீசல் வழங்கக் கோரிக்கை!

கொழும்பு, மே 30

தவணை விடுமுறை முடிந்து பாடசாலைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன்னதாக பாடசாலை போக்குவரத்து வாகனங்களுக்கு டீசல் பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுக்க வேண்டும் என்று அகில இலங்கை பாடசாலை சிறுவர் போக்குவரத்துச் சங்கம் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலை வாகனப் போக்குவரத்தை அத்தியாவசிய சேவையாகக் கருதி அவர்களின் குறைகளுக்குத் தீர்வுகளை வழங்கவேண்டுமென்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அந்தச் சங்கம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேவையான எரிபொருள் கிடைக்காவிட்டால், பாடசாலைகள் ஆரம்பிக்கும்போது போக்குவரத்துச் சேவைகளைத் தொடர முடியாது என்றும் அந்தச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)




## நீண்ட நாள்களின் பின்னர் மண்ணெண்ணெய் வழங்கல்

மன்னாரிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சிலவற்றில் நீண்ட நாள்களுக்குப் பின்னர் நேற்று மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. இதனால் நேற்று அதிகாலையிலிருந்தே மக்கள்நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

பங்கீட்டு அட்டை அடிப்படையில் 500 ரூபாவுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டது. இதேவேளை- குடும்ப அட்டைகள் வழங்கப்படாத நபர்களுக்கு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலின் பின்னரே விநியோகிக்கப்பட்டது.

மண்ணெண்ணெய் விநியோகத்தில் முரண்பாடுகள் ஏற்படாமல் இருக்க மன்னார் பிரதேச செயலரின் ஒழுங்கமைப்பில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டனர். அத்துடன் மேலதிக பாதுகாப்பு நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (ம-14-213)

## எரிபொருளை விற்ற இரண்டு பேர் கைது

கொழும்பு, மே 30

மிரிஸ்வத்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 80 லீற்றர் பெற்றோலுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டனர். இருவேறு இடங்களில் இந்தச் சம்பவம் பதிவானது.

மிரிஸ்வத்த பிரதேசத்திலுள்ள மீன் விற்பனை நிலையமொன்றில் சோதனை மேற்கொண்டபோது 45 லீற்றர் பெற்றோலுடன் சந்தேகநபர் ஒருவரும், புத்தளம் வனாத்தவில்லுவ பிரதேசத்தில் உள்ள கடையொன்றில் இருந்து 35 லீற்றர் பெற்றோலுடன் பிறிதொருவரும் கைதுசெய்யப்பட்டனர். (ம-ய)

## கடவுச்சீட்டைப் பெறுவதற்காக 2 ஆயிரத்து 500 பேர் முற்பதிவு

கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு நாளாந்தம் 2 ஆயிரத்து 500 பேர் வரை முற்பதிவு செய்வதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரையான காலங்களில் வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்களின் எண்ணிக்கையைவிட தற்போது அதிகமான கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-14-இ)

# பொருளாதார நெருக்கடி நிலையால் சிறுகுடிசைக் கைத்தொழில் பாதிப்பு

## மன்னார் உற்பத்தியாளர்கள் கவலை

மன்னார், மே 30

பொருள்களுக்கான விலை ஏற்றம், எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் இதர பொருண்மிய நெருக்கடிகள் காரணமாக சிறு குடிசைக் கைத்தொழில் கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ளது. இதனை நம்பி வாழ்ந்த முயற்சியாளர்கள் பலர் தொழிலைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று மன்னார் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:- மன்னார் மாவட்டத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக சவர்க்காரம், சவர்க்காரப் பவுடர்கள், கிருமித் தொற்று நீக்கித் திரவங்கள், காளான் உற்பத்தி, இயற்கை மூலிகை இலைகள் மூலம் மருத்துவக் குணமிக்க ஊட்டச்சத்து நிறைந்த மா வகை உணவுப்பொருள்கள், எண்ணெய் வகைகள், மெழுகுதிரி உற்பத்தி போன்ற குடிசைக் கைத்தொழில்களில் பலநூறு குடும்பங்கள் ஈடுபட்டு வருகின்றன.

எழுத்தூர், உப்புக்குளம், பெரிய பண்டிவிரிச்சான் போன்ற பகுதிகளில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளும், பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பங்களும் இந்தக் குடிசைக் கைத்தொழில்களை தமது வாழ்வாதாரமாக நம்பியிருந்தன. ஆனால், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி அனைவரிடமும் வாழ்க்கையைப் புரட்டிப்போட்டுள்ளது.

இந்தப் பொருளாதார நெருக்கடியால், சிறு கைத்தொழில் உற்பத்தியில் ஒருபொருளை விற்கும் விலையை விடவும் அதை உற்பத்தி செய்வதற்குச் செலவிடும் தொகை அதிகமாகவுள்ளது. விற்பனை விலையை அதிகரித்தால் பொருள்களின் கொள்வனவில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால், இந்த உற்பத்திகளை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த பலர் தற்போது தொழிலைக் கைவிட்டுள்ளனர்.

எனவே குடிசைக் கைத்தொழில்களை தொடர்ந்தும் மேற்கொள்வதாயின் அரசாங்கம் எமக்கு சரியான தொரு பொறிமுறையை உருவாக்கித் தரவேண்டும். அத்துடன், புலம்பெயர் உறவுகளும், பெரிய வியாபாரிகளும் இணைந்து எமது உற்பத்திப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் -என்றனர். (ம-க-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# எண்ணெய் நிறுவனங்களை இலங்கைக்கு அழையுங்கள்

## பொருளாதார நெருக்கடிக்கு சம்பிக்க ஆலோசனை



**கொழும்பு, மே 30**

**இந்திய எண்ணெய் நிறுவனத்தை மட்டுமல்லாது ஏனைய எண்ணெய் நிறுவனங்களையும் இலங்கைக்கு அரசாங்கம் அழைக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.**

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மசகு எண்ணெய் உற்பத்தி செய்யும் நாட்டில் இருந்து எண்ணெய் வழங்குபவராக இருந்தால் அது இலங்கைக்கு மிகவும் நன்மை பயக்கும்.

100 பீப்பாய் மசகு எண்ணெய் உள்ளீடு செய்து 38 பீப்பாய் எரிபொருளை மட்டுமே உற்பத்தி செய்வதால் இலங்கையின் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களின் செயற்றிறன் அதிகரிக்கப்படவேண்டும்.

வாரத்தின் வெவ்வேறு நாள்களில் பஸ்கள், லொறிகள் மற்றும் மீன்பிடி மற்றும் விவசாயத் துறைகள் போன்ற பல்வேறு வாகன வகைகளுக்கு எரிபொருள் விற்பனை செய்யப்படவேண்டும். பொதுப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும்ரயில் அமைப்புடன் 5.4 மில்லியன் வாகனங்களும் இலங்கையில் உள்ளன. எரிபொருள் தேவையில் ஒரு வீதத்தை மட்டும் பயன்படுத்தும் ரயில்கள் ஊடாக ஐந்து வீதமானவர்களே பயணிக்கின்றனர். 48 வீதமானவர்கள் பஸ்கள் மூலம் பயணிக்கின்றனர். அதற்காக எரிபொருள் தேவையில் 10 வீதம் பயன்படுத்தப்படுகின்றது - என்றார். (எ-இ)



# சபுகஸ்கந்த நிலையம் மீண்டும் மூடப்படலாம்

## தொழிற்சங்கங்கள் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்துக்கு வழங்கப்படும் மசகு எண்ணெய் அடிப்படைப் பணிகளுக்குக்கூடப் போதுமானதாக இல்லை என்பதால் அதன் செயற்பாடுகள் மீண்டும் நிறுத்தப்படும் என்று தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பில் தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்துள்ளதாவது:-

தேவையான அளவு மசகு எண்ணெய்க்கான முன்பதிவுகளை வழங்கத் தவறியதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

சுத்திகரிப்பு நிலையத்தின் 60 வீத மசகு எண்ணெய் நுகர்வு, உலை எண்ணெய் மூலமாகவே மேற்கொள்ளப்படுகின்றது.

சுத்திகரிப்பு நிலையத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்குப் போதுமான மசகு எண்ணெய் இல்லை.

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாட்டுக்கு 5 ஆயிரம் மெற்றிக்தொன் மசகு எண்ணெய் தேவைப்படுகின்றது. சுத்திகரிப்பு நிலையம் குறைந்தபட்ச கொள்ளளவில் இயங்குவதற்கு 3 ஆயிரம் மெற்றிக்தொன் மசகு எண்ணெய் தேவை- என்றார். (எ-இ)



## எரிபொருள் பற்றாக்குறை

# மட்டுப்படுத்தப்படும் பஸ் சேவைகள்!

கொழும்பு, மே 30

நாடுமுழுவதும் எரிபொருள் நெருக்கடி காரணமாக வார இறுதியில் பஸ் சேவைகளை சுமார் 30 வீதமாக மட்டுப்படுத்தப்படலாம் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (ய)

# இரு வாரங்களுக்குப் போதுமான பெற்றோல், டீசல் கையிருப்பில்

கொழும்பு,மே 30

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குப் போதுமான டீசல் மற்றும் பெற்றோல் கையிருப்பில் உள்ளது என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

டீசல் அடங்கிய கப்பல் ஒன்று நாட்டை வந்தடைந்துள்ளது. குறித்த கப்பலில் இருந்து டீசலைத் தரையிறக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்துடன் எதிர்வரும் ஜூன் மாதம் 14 மற்றும் 16ஆம் திகதிகளிலும் டீசல் அடங்கிய கப்பல்கள் நாட்டை வந்தடையவுள்ளன.

அதேவேளை, நாட்டை வந்தடைந்துள்ள கப்பல் ஒன்றிலிருந்துதற்போது மசகு எண்ணெய் தரையிறக்கப்படுகின்றது.

இதன் ஊடாக எரிபொருளை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் இன்று முதல் ஆரம்பமாகவுள்ளன.

இதனூடாக நாளாந்தம் ஆயிரம் மெற்றிக் தொன் டீசல், 600 முதல் 800 மெற்றிக் தொன் மண்ணெண்ணெய் மற்றும் விமான எரிபொருள் என்பவற்றை உற்பத்தி செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

# தடையின்றி தொடர்கிறது எரிபொருள் விநியோகம்!



கொழும்பு, மே 30

நாட்டிலுள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் பெற்றோல் மற்றும் டீசல் விநியோகம் எந்தவிதத் தடைகளும் இன்றித் தொடர்கின்றது என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாக எரிபொருளைப் பெறுவதற்கு நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் முண்டியடித்துக் கொண்டிருந்தநிலையில் நேற்றுமுன்தினமும் நேற்றும் அந்த வரிசைகள் பெருமளவாகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு, எரிபொருள் பற்றாக்குறை

# ஒருவேளை உணவை பெறமுடியாத நிலை!

## கொழும்பு மக்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி கவலை

கொழும்பு, மே 30

**எரிவாயு மற்றும் எரிபொருள் பிரச்சினை காரணமாக கொழும்பு வாழ் மக்களால் ஒருவேளை உணவைக்கூட பெறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி கவலை தெரிவித்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் வட கொழும்பு பிரதான அமைப்பாளரும் பொருளாதார ஆலோசகருமான சீ.வை.பி.ராம் இது தொடர்பில் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கொழும்பு மாவட்டத்தில் இருப்பவன் என்ற வகையில் கொழும்பில் வாழும் மக்கள் எதிர்கொண்டுவரும் கஷ்டங்களைக் கண்டு வருகின்றேன். அதிலும் குறிப்பாக தொடர்மாடி குடியிருப்புக்களில் வாழும் மக்கள் எரிவாயு, எரிபொருள் பிரச்சினை காரணமாக பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

கொழும்பு பிரதேசத்தில் நாளாந்த வாழ்வாதாரத்துடன் வாழ்க்கையை கொண்டுசெல்லும் மக்கள் மிகவும் துன்பமான நிலையை எதிர்கொண்டுள்ளனர். அதனால் அந்த மக்கள் நாள் ஒன்றுக்கு மூன்று வேளையல்ல, ஒரு வேளை உணவைக்கூட பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

நாட்டில் பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினை தலைதூக்கியுள்ளது. இந்த இரண்டு பிரச்சினைகளையும் வெற்றிகொள்ளவேண்டி இருக்கின்றது. இதன் மூலமே மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இந்த மாதம் நாடாளுமன்றம் இரண்டு வாரங்கள்கூடியபோதும் மக்கள் எதிர்கொண்டுள்ள எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காணப்படவில்லை. தொடர்ந்து பல நாள்கள் இந்த மக்கள் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய்க்கு வரிசையில் இருந்து விட்டு திரும்பிச் செல்கின்றனர். இவ்வாறான நிலையிலேயே கொழும்பு மக்கள் பொறுமையை இழந்து வீதியை மறித்து போராட்டங்களில் ஈடுபடுகின்றனர்.

அதனால் நாட்டின் ஏனைய பிரதேச மக்களைவிட கொழும்பு வாழ் மக்களே எரிவாயு, மண்ணெண்ணெய் இல்லாமல் அதிகம் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அதனால் கொழும்பு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்கு விரைவாக தீர்வுகாண அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் -என்றார். (ம)

## எரிவாயு விநியோகம் புதனன்றே சாத்தியம்

கொழும்பு, மே 30

எதிர்வரும் புதன்கிழமை எரிவாயு விநியோகத்தை முன்னெடுக்கக்கூடிய சாத்தியமுள்ளது என்று லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் சமையல் எரிவாயு தாங்கிய கப்பல் இன்று திங்கட்கிழமை இலங்கையை வந்தடையும். அதனால் விநியோகம் தாமதிக்கும். எனவே எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள மக்கள் வரிசைகளில் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை என்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை சமையல் எரிவாயு விநியோகம் இன்று முதல் ஆரம்பிக்கப்படும் என்று குறித்த நிறுவனம் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

## பொலிஸாருக்கு பெற்றோல் விற்று வசமாகச் சிக்கிக்கொண்ட பெண்!


கொழும்பு, மே 30

சட்டவிரோதமாக அதிக விலைக்கு எரிபொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் அளுத்கம கூட்டுறவு எரிபொருள் நிலைய உரிமையாளரின் மனைவி கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கலாவில கந்தேவாச என்ற இடத்தில் அதிக விலைக்குப் பெற்றோல் விற்பனை செய்தபோது, பெற்றோல் கையிருப்புடன் இவர் கைது செய்யப்பட்டார் என்று பேருவளைப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், பணி முடிந்து வரும்போது தனது கணவர் கொண்டுவரும் பெற்றோலை, தான் விற்பனை செய்து வந்தார் என்று தெரிவித்துள்ளார்.

பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த தகவலை அடுத்து, சிவில் உடையில் சென்ற பொலிஸாருக்கு அந்தப் பெண் ஒரு போத்தல் பெற்றோலை 800 ரூபாவுக்கு விற்பனை செய்தார் என்றும், அதன்போது அவர் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## விண்ணைத் தொடும் கச்சா எண்ணெய் விலை!




கொழும்பு, மே 30

உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஒரு மாத இடைவெளியில் உச்சத்தை எட்டியுள்ளது.

ஏப்ரல் மாத இறுதியில், கச்சா எண்ணெய் விலை 107 டொலராக இருந்த நிலையில், நேற்று பரல் ஒன்றின் விலை நேற்று 120 அமெரிக்க டொலராக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

உக்ரைன் - ரஷ்யா இடையே போர் நீடித்துவருவதால், இலங்கையில் பெற்றோல், டீசல் உள்ளிட்ட அனைத்து வகையான எரிபொருள்களின் விலைகளும் சடுதியாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ய-இ)

## மோ.சைக்கிள், ஓட்டோக்களுக்கு '95' ஒக்ரேன் பெற்றோல் இல்லை!

கொழும்பு, மே 30

மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களுக்கு 95 ரக ஒக்ரேன் பெற்றோல் வழங்குவதை நிறுத்துவதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஓட்டோக்களுக்கு 92 ரக ஒக்ரேன் பெற்றோல் மட்டுமே காலவரையறையின்றி வழங்கப்படும்.

நாட்டிலுள்ள எரிபொருள் இருப்புக்களைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-14-இ)

## கட்சிகளின் செயலாளர்களுக்கு தேர்தல் ஆணைக்குழு அழைப்பு

கொழும்பு, மே 30

நாட்டில் நிலவும் தற்போதைய நிலைமை குறித்து எதிர்வரும் 6ஆம் திகதி விவாதிக்க வருமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

நாட்டின் நெருக்கடி நிலைமை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெகுசில தினங்களுக்கு முன்னர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டியிருந்த நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழு கட்சிகளின் செயலாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-இ)

### எரிபொருள் நெருக்கடி காரணமாக

## சுகாதாரத்துறையினருக்கு சிறப்பு விடுமுறைகள்

கொழும்பு, மே 30

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி காரணமாக, சுகாதாரத் துறையினருக்கு விசேட வாராந்த விடுமுறைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் சுகாதாரத்துறை ஊழியர்கள் அனைவருக்கும் வார நாள்களில் இரண்டு அல்லது மூன்று நாள்கள் விசேட விடுமுறை வழங்கப்படவுள்ளது.

சுகாதாரத்துறை ஊழியர்களுக்கு எரிபொருள் நிரப்புவதில் முன்னுரிமை அளிக்கும் வகையில் வழங்கப்பட்ட அட்டையும் பயனற்றுப் போயுள்ளதன் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது. (ய)

## 500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்

கொழும்பு, மே 30

திறந்த கணக்குகள்மூலம் இறக்குமதி செய்வதைத் தடைசெய்யும் அரசாங்கத்தின் நடவடிக்கை காரணமாக, இறக்குமதி செய்யப்பட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உள்ளடங்கிய சுமார் 500 கொள்கலன்கள் விடுவிக்கப்பட முடியாமல் துறைமுகத்தில் தேக்கமடைந்துள்ளன என்று இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.



வெங்காயம், உருளைக்கிழங்கு, பூண்டு, பருப்பு, உலர் உணவுப் பொருள்கள் போன்ற இலகுவில் பழுதடையும் அத்தியாவசியப் பொருள்கள் இதில் காணப்படுகின்றன என அத்தியாவசியப் பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன தெரிவித்துள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பிள்ளைக்கறி தின்னும் கயவர்

வன்மமும்,காமமும், போதையும் ஆயிஷா என்ற சிறுமியின் உடலைக் குதறி, உயிரைக் குடித்திருக்கின்றன. 'போரும் பஞ்சமும் முதலில் பலியெடுப்பது பெண்களையும், குழந்தைகளையும்தான்' என்று சொல்வார்கள். ஏனெனில் உடற்கூற்றியலின்படி, பெண்களும், குழந்தைகளும் வீழ்த்தப்படுவதற்கு இலகுவானர்கள். அதனால்தான் பலரும் தங்கள் வக்கிரத்தை தீர்த்துக்கொள்ளும் கருவிக்ளாகக் குழந்தைகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். தங்கள் கொடூரமுகம் இந்த உலகத்துக்கு தெரியவரக்கூடாது என்பதற்காக அந்த இளந்தளிர்களைக் கொய்து, கொலையும் செய்துவிடுகின்றனர். அட்டுலுகமவைச் சேர்ந்த ஆயிஷாவுக்கும் இதுதான் நேர்ந்துள்ளது.

ஆயிஷாவின் சாவுக்கு பிரதானமான காரணம், அவளின் சூழல். அந்தக் கிராமம் முழுவதுமே போதைக்கு அடிமையானவர்கள்தான் நிறைந்துள்ளார்கள். முதலில்அந்தக் கிராமத்தவர்கள் குடும்பச் சூழல் காரணமாக, குறைந்த காலத்தில் அதிக பணத்தைச் சம்பாதிக்கலாம் என்ற நப்பாசையில்,போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டார்கள். காலப்போக்கில் எந்தப் போதைப்பொருளைக் கடத்தினார்களோ அதற்கு அவர்களே அடிமைகளாகத் தொடங்கிவிட்டார்கள். கொலையுண்ட ஆயிஷாவின் தந்தை கூட போதைக்கு அடிமையானவர்தான். ஆயிஷா கொல்லப்பட்ட செய்தியைக்கூட உணரமுடியாதளவுக்கு அவர் போதையில் மிதந்துகொண்டிருந்தார் என்று தகவல்கள் சொல்கின்றன. ஒருவேளை ஆயிஷாவின் தந்தை போதைக்கு அடிமையானவராக இல்லாதபட்சத்தில், அவள் காணாமற்போன சில நிமிடங்களிலேயே அவளைத் தேடி ஓடியிருப்பார். அவரின் தேடலில் அவள் உயிரோடு மீட்கப்பட்டிருக்கவும்கூடும். ஆனால், ஆயிஷா கோழி இறைச்சி வாங்கச் சென்றதோ, அவள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்டதோ, பின்னர் அவள் குதறப்பட்டு சதுப்புக் காணிக்குள் சடலமாக மீட்கப்பட்டதோ அந்தத் தந்தைக்கு பலமணித்தியாலத்தின் பின்னரே-போதை தெளிந்த பிறகே- தெரிய வந்திருக்கிறது. ஆயிஷா என்ன காரணத்துக்காகக் கொல்லப்பட்டாள் என்பது இன்னமும் உறுதியாகத் தெரியவராத போதிலும், தந்தையின் போதைப்பழக்கமும் அவள் உயிரை இழப்பதற்கு ஒரு முக்கியமான காரணம்.

குதிரைகள் எல்லாம் ஓடிச் சென்ற பின்னரே லயத்தை மூடுகின்ற , பருவம்தப்பிய செயல்களில் ஈடுபடுகின்ற அதே பழைய பல்லவியைத்தான் ஆயிஷாவின் மரணத்துக்குப் பின்னரும் நம்மில் பலர் பாடப்போகின்றார்கள். பெண்குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டும், விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும், இனியொரு மரணம் ஏற்படாமல் பார்க்கவேண்டும், ஆயிஷாவுக்கு நீதி வேண்டும் என்றெல்லாம் கோஷங்களோடு சிலநாள்கள் அந்தப்பல்லவி பாடப்படும். அதன் பின்னர் மெல்ல மெல்ல ஆயிஷாவை மறந்துவிடுவோம். பின்னர் இன்னொரு நாளில், இன்னொரு இடத்தில், இன்னொரு குழந்தை குதறப்படும்போது, இப்போது எழுப்பிய அதே பல்லவிகளோடு புறப்படுவோம். இதுதானே காலநீட்சிக்கும் நடக்கின்றது. இனியாவது கொஞ்சம் யதார்த்தமாக, நடைமுறைப்படுத்தக் கூடிய, குழந்தைகள் மீதான குற்றங்களை ஒழிக்கக் கூடிய வழிகளைக் கண்டறியவேண்டும். தண்டனைகள் கடுமையாகும் போதுதான் குற்றங்கள் குறையும். 'பெண்கள் மீது கை வைத்தால் வெட்ட வேண்டியது அவனது விரல்களை அல்ல, தலையை!' என்றொரு வசனம் பாகுபலி படத்தில் வரும். அதேபோல 'குழந்தைகள் மீது கைவைத்தாலும் தலை உருளும்' என்னுமளவுக்கு சட்டம் இறுக்கமாக்கப்பட்டு, துரிதகதியில் நீதி நிலைநாட்டப்படும் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் மீதான வக்கிரங்களும், குற்றங்களும், குதறல்களும் குறையும். இல்லையேல், பிள்ளைக்கறி தின்னும் கயவர்களால் ஆயிரமாயிரம் ஆயிஷாக்கள் கருக்கப்படுவது தொடர் கதையாகிவிடும்.

### நாளொரு நல்வார்த்தை

"ஒரேயடியாக உச்சிக்கு ஏறிவிட வேண்டும் என்ற முயற்சிதான் உலகில் பல பெருந்துயருக்கும் காரணமாயிருக்கிறது"

-சாமுவேல் பட்லர்.



# சிறுபோக உரவிநியோகம்; நான் பொறுப்பேற்கமாட்டேன்

## விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு



**கொழும்பு, மே 30**

**சிறுபோகச் செய்கைக்குத் தேவையான உரத்தைப் பெற்றுக்கொடுப்பது தொடர்பில் பொறுப்பேற்கமுடியாது என்று தெரிவித்தார் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர.**

இதுதொடர்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்ததாவது:- புதிய அரசாங்கத்தில் விவசாயத்துறை அமைச்சராக பதவியேற்றுள்ள காரணத்தால் திடீரென உர விநியோகத்தைச் சீர்படுத்தலாம் என்று எண்ணுவது தவறான அணுகுமுறையாகும். காசு கொடுத்துக் கூட உரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாத நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. உர உற்பத்தி மற்றும் விநியோக நிறுவனங்களுக்குப் பெரும்தொகையை, நிலுவையைச் செலுத்தவேண்டியுள்ளது. ஆதலால் இதையெல்லாம் ஓரிரு நாள்களில் சரிசெய்ய இயலாது. சிறுபோக விவசாய நடவடிக்கைக்கு உரம் விநியோகிக்கும் பொறுப்பை ஏற்க முடியாது. பெரும்போக விவசாயத்துக்கு உரம் விநியோகம் செய்வதற்குப் பொறுப்பேற்கமுடியும். விவசாயிகளுக்குப் பொய்யான வாக்குறுதியை வழங்க விரும்பவில்லை- என்றார். (ம)

# ஒக்ரோபரில் அரிசிக்குத் தட்டுப்பாடு

## பேராசிரியர் எதிர்வுகூறல்

கொழும்பு, மே 30

இலங்கையில் இந்த வருடத்தின் ஒக்ரோபர் மாதமளவில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாயபீடத்தின் சிரேஷ்ட பேராசிரியர் புத்தி மாரம்பே தெரிவித்துள்ளார்.

சிறுபோகம் பாதியளவு நிறைவடைந்துவிட்டது. ஆனாலும், போதுமான அளவு இரசாயன உரம் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இந்தமுறை 3 லட்சத்து 15 ஆயிரம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சிறுபோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வழமையாக சுமார் 4 லட்சம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் சிறுபோகம் மேற்கொள்ளப்படும்.

சிறுபோகத்துக்கு 80 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரம் தேவை. எனினும் நாட்டில் இரசாயன உரத்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதோடு, அதிக விலைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. இவ்வாறான பின்னணியில் இந்தமுறை சிறுபோக விளைச்சல் 50 வீதத்தால் வீழ்ச்சியடையும். அதனால் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (க-இ)

**நாளை** 31.05.2022 செவ்வாய்க்கிழமை வைகாசி 17

சுபநேரம்: 10.22 - 11.52

ராகுகாலம்: 02.52 - 04.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று மகிழ்ச்சி நீடிக்கும். குடும்பத்துக்காகச் செலவு செய்வீர்கள். விருந்தினர் வருகையால் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். எதிர்பாராத செலவு ஏற்படும்.

**இடபம்:** செலவு கட்டுப்படும். குடும்பத்தினருடன் மகிழ்வீர்கள். மாலையில் இனிய அனுபவம் உண்டு. மகிழும் வகையில் இன்றையபொழுது அமையும். சந்தோஷம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** பணவரவும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும். ஆனால் திடீர் செலவுகளைச் சந்திப்பீர்கள். புதிய சிந்தனை மேலோங்கும். இன்று சுறு சுறுப்பாகச் செயற்படுவீர்கள்.

**கடகம்:** வருமானம் கூடும். சந்தோஷமான மனநிலை உருவாகும். தொழிலில் புதிய உத்தியைக் கையாள்வீர்கள். எதிர்பார்ப்பு நிறை வேறும். நண்பர்களால் மகிழ்வீர்கள்.

**சிம்மம்:** செயலில் இழுபறி இருக்கும். உங்களின் விருப்பம் நிறைவேறும். மதியத்துக்கு மேல் உங்களுடைய செயல்களில் நன்மை காண்பீர்கள். குழப்பத்தில் இருந்து விடுபடுவீர்கள்.

**கன்னி:** மனம் படபடப்பாக இருக்கும். பின்னர் குடும்பத்தினருடன் பொழுது போக்குவீர்கள். நெருக்கடி விலகும். பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**துலாம்:** முயற்சி வெற்றியாகும். அதன்பின் மனதுக்குச் சங்கடம் உண்டாகலாம். வீண் பிரச்சினையைச் சந்திப்பீர்கள். அந்நியர் தொந்தரவுகளால் உங்கள் மனம் அவதிப்படும்.

**விருச்சிகம்:** சந்தோஷம் அதிகரிக்கும். கணவன்– மனைவி உறவில் இருந்த பிரச்சினை விலகும். மகிழ்ச்சியான நாள். குடும்பத்தினரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவீர்கள். கூட்டுத் தொழிலில் இருந்த சங்கடங்கள் விலகும்.

**தனுசு:** இழுபறியான வேலைகளை முடிப்பீர்கள். தொல்லை விலகும். உற்சாகமுடன் செயற்பட்டு வருவீர்கள். பிரச்சினைகளுக்கு முடிவு கட்டுவீர்கள். ஆதாயம் காண்பீர்கள்.

**மகரம்:** குடும்பத்தினருடன் பொழுதைக் கழிப்பீர்கள். இனிய சம்பவங்கள் நடைபெறும். உறவுகளால் உண்டான சங்கடம் விலகும். திட்டமிட்டு செயற்பட்டு தேவையை அடைவீர்கள்.

**கும்பம்:** செயல்களில் வேகம் அதிகரிக்கும். வருமானத்தால் மகிழ்ச்சியான மனநிலையுடன் இருப்பீர்கள். உங்களுடைய முயற்சி வெற்றி பெறும். எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும்.

**மீனம்:** எண்ணம் நிறைவேறும். குடும்பத்தினரின் மகிழ்ச்சியில் அக்கறை காட்டுவீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து செயற்படுவீர்கள். செல்வாக்கு உயரும். மகிழ்ச்சியான நாள்.

# கல்விக்கொள்கையை மாற்றியமையுங்கள்

### சிலியில் மாணவர்கள் போராட்டம் வன்முறையாக மாறியதால் பதற்றம்





**சாண்டியாகோ, மே 20**

**தென் அமெரிக்க நாடான சிலியில் மாணவர்கள் போராட்டம் வன்முறையாக வெடித்ததால் அங்கு பதற்றம் ஏற்பட்டுள்ளது.**

உணவுப்பொருள்களுக்கான மானியம், கல்விச் செயற்பாட்டுக்கு கூடுதல் நிதி ஒதுக்கல் மற்றும் அந்த நாட்டு கல்விக் கொள்கை ஆகியவற்றுக்கு எதிராக சிலியின் சாண்டியாகோவில் ஆயிரக்கணக்கான மாணவர்கள் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்துக்கு அந்நாட்டுப் பொலிஸார் அனுமதி வழங்காததால் இருதரப்பினர் இடையேயும் கலவரம் மூண்டது. இதனைத் தொடர்ந்து கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி கூட்டத்தைப் பொலிஸார் கலைத்தனர். எனினும் பொலிஸாரின் வாகனங்களை மாணவர்கள் அடித்து நொருக்கி தீ வைத்த நிலையில் நீர்த்தாரைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவங்கள் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# பிரேஸிலில் கனமழை; 37 பேர் உயிரிழப்பு

பிரேஸிலியா, மே 30

வடகிழக்குப் பிரேஸிலில் பெய்துவரும் தொடர் கனமழையால் நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 37 பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடகிழக்கு பிரேஸிலின் பெர்னாம்புகோ மாநிலத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தொடக்கம் பெய்துவரும் தொடர்மழையால் வெள்ளம் குடியிருப்புப் பகுதிகளில் சூழ்ந்ததால் ஆயிரக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்த நிலையில் அங்கு வெள்ளம், நிலச்சரிவில் சிக்கி இதுவரை 37 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளம், நிலச்சரிவால் பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் தேசிய பேரிடர் மீட்புக்குழுவினர், இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# தேவாலயத்தில் நெரிசல்; 31 பேர் உயிரிழப்பு

### நைஜீரியாவில் சோகம்


லாகோஸ், மே 30

நைஜீரியாவில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட 31 பேர் உயிரிழந்தனர்.

தென்கிழக்கு நகரமான போர்ட் ஹார்கோர்ட்டில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

அவ்வேளை தேவாலயத்தில் உணவு வழங்குகிறார்கள் எனத் தெரிவித்த தகவலையடுத்து நூற்றுக்கணக்கன மக்கள் சிறிய வாசல் ஒன்றின் வழியே முண்டியடித்துக் கொண்டு செல்ல முயன்றுள்ளனர்.

இதன்போது கூட்ட நெரிசலில் சிக்கி 31 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 7 பேர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் [illegible] அதிகாரிகள் தெரிவித்தனர். (ச-இ)



# லைமன் நகரையும் கைப்பற்றியது ரஷ்யா

கீவ், மே 30

உக்ரைனின் மூலோபாய நகரமான லைமன் நகரை முழுவதுமாகக் கைப்பற்றிவிட்டதாக ரஷ்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. இதனை ஒப்புக்கொண்ட உக்ரைன் அதிகாரிகள், லைமனுக்கு அருகில் இருக்கும் ஸ்லோவியன்ஸ்க் நகரை நோக்கி ரஷ்யப் படைகள் முன்னேறுவதைத் தடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்குவது ஆபத்தானது

### புடின் எச்சரிக்கை

மொஸ்கோ, மே 30

உக்ரைனுக்குத் தொடர்ந்து ஆயுத உதவிகளை வழங்குவது மிகவும் ஆபத்தானது என பிரான்ஸ், ஜேர்மன் ஆகிய நாட்டுத் தலைவர்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் முதல் உக்ரைன்மீது தொடர் தாக்குதலை நடத்திவரும் ரஷ்யா உக்ரைனின் தெற்கு -கிழக்குப் பகுதிகளைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளது.

இதேவேளை, ரஷ்யாவை எதிர்த்துப் போரிட உக்ரைனுக்கு அமெரிக்கா, பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் ஆயுதம் வழங்கி வருகின்றன.

இந்த நிலையில் பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனும் ஜேர்மன் பிரதமர் ஸ்கோல்சும் தொலைபேசியில் புடினுடன் நேற்றுமுன்தினம் பேச்சு நடத்தினர்.

அதன்போது உக்ரைனுக்கு ஆயுதங் களை வழங்குவது நிலைமையை மேலும் மோசமாக்கும் என புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி ஊர்காவற்றுறை பிரதேசம்

## பிரதேச செயலர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், மே 30**

**ஊர்காவற்றுறை பிரதேச மக்கள் போக்குவரத்து, தொழில்வாய்ப்பு எனப் பல்வேறு அடிப்படைத் தேவைகளின்றி தமது வாழ்நாள்களைக் கழித்து வருகின்றனர்.**



எனவே அவர்களது முக்கியமான தேவைகளை அடையாளப்படுத்தி அவற்றை நிறைவேற்றவேண்டும் என்று ஊர்காவற்றுறைப் பிரதேச செயலாளர் ச.மஞ்சுளா தேவி கோரிக்கை விடுத்தார்.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் தீவக மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அனலைதீவு மற்றும் எழுவைதீவு மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. ஊர்காவற்றுறை வாழ் மக்களுக்கும் மண்ணெண்ணெய் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டும். ஊர்காவற்றுறையில் கடற்றொழிலை தாண்டியும் விவசாயத்திலும் பலர் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் நீர் இறைக்கும் இயந்திரத்துக்கு எரிபொருள் இன்றிச் சிரமப்படுகின்றனர். ஆகவே அவர்களுக்கும் பொறிமுறையொன்று உருவாக்கப் படவேண்டும்.

அதேவேளை, இங்குள்ள கடல்போக்குவரத்துப் பாதையூடான போக்குவரத்து எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பலதரப்பட்ட உத்தியோகத்தர்கள் உட்பட பொது மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊர்காவற்றுறை மருத்துவமனையில் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆகவே, பிரதேச மக்களின் அடிப்படைத்தேவைகளைப் பூர்த்திசெய்ய அனைவரும் முன்வரவேண்டும்- என்றார். (க-125)




## ஆயிஷா கொலை வழக்கு: சி.ஐ.டியினரிடம் ஒப்படைப்பு

கொழும்பு, மே 30

பண்டாரகம, அட்டுலுகம பிரதேசத்தில் கடந்த 27ஆம் திகதி காணாமற்போய், நேற்றுமுன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்ட சிறுமி ஆயிஷா தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டுலுகம - அலுகஸ்ஸாலி வித்தியாலயத்தில் 4ஆம் தரத்தில் கல்வி கற்கும் 9 வயதுடைய பாத்திமா ஆயிஷா என்ற சிறுமியே காணாமற்போய் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தனது வீட்டில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் உள்ள கடையொன்றில் கோழி இறைச்சி வாங்கச் சென்ற போதே சிறுமி காணாமற் போயிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆயிஷாவின் குடும்பத்துக்கு ஜனாதிபதி இரங்கல்!

கொழும்பு, மே 30

படுகொலை செய்யப்பட்ட சிறுமி பாத்திமா ஆயிஷாவின் குடும்பத்துக்குத் தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார். ஆயிஷாவின் கொலைக்கு நீதியைத் தேடுவதற்காக, விரைவான நடவடிக்கையை துரிதப்படுத்துவதற்கு நான் உறுதியளிக்கின்றேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)



## ஆயிஷாவின் தந்தையிடம் நீண்டநேரம் விசாரணை

கொழும்பு, மே 30

பண்டாரகம, அட்டுலுகம பகுதியைச் சேர்ந்த பாத்திமா ஆயிஷா என்ற ஒன்பது வயதுச் சிறுமி படுகொலை செய்யப்பட்ட நிலையில், சிறுமியின் தந்தையிடம் நீண்டநேரம் விசாரணை நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறுமி காணாமற்போனமை தொடர்பில் பண்டாரகம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், பாணந்துறைப் பிரதேச குற்ற விசாரணைப் பிரிவினர் மற்றும் புலனாய்வு அதிகாரிகளும் தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சிறுமியின் நெருங்கிய உறவினர் ஒருவர் தொடர்பிலும் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சிறுமி காணாமற்போவதற்கு முந்தையநாள் இரவு அணிந்திருந்த ஆடையை மோப்பம் பிடித்த பொலிஸ் நாய், குறித்த சிறுமி கோழி இறைச்சி வாங்கச் சென்றதாகக் கூறப்படும் கடைக்கு அருகில் போய் நின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ரயில் மோதி சிறுமி சாவு!

திருகோணமலை, மே 30

ரயில் மோதி 7 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

திருகோணமலை- கொஸ்கொட தியகம ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள ரயில் கடவையில் இடம்பெற்ற விபத்திலேயே சிறுமி உயிரிழந்துள்ளார். உயிரிழந்த சிறுமி தியகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டது. (ம-14-இ)

## பரீட்சையில் ஆள்மாறாட்டம்: சந்தேகநபர்களுக்குப் பிணை

கொழும்பு, மே 30

பரீட்சையில் ஆள்மாறாட்டம் செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்ட இரு சந்தேகநபர்களுக்கும் கல்முனை நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

அம்பாறை- கல்முனை வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் 21 வயது மதிக்கத்தக்க ஒருவர் போலி பரீட்சார்த்தியாகத் தோற்றியுள்ளார்.

சிங்களமொழி மூலம் சமயபாடப் பரீட்சையை 32 வயதுடைய தனிப்பட்ட பரீட்சார்த்தியின் அனுமதி அட்டையைப் பாவித்து, அவருக்குப் பதிலாக ஆள்மாறாட்டம் செய்து அவர் எழுதியுள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபட்ட இருவரும் கல்முனை நீதிவான நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவர்கள் இருவரும் இரண்டு நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அந்த வழக்கு மீண்டும் விசாரிக்கப்பட்டது. இதன்போதே சந்தேகநபர்களுக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரமாகிறது டெங்கு!



## தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவிப்பு

கொழும்பு, மே 30

**நாடளாவிய ரீதியில் மீண்டும் டெங்குத் தொற்று தீவிரமாகி வருகின்றது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு அறிவித்துள்ளது.**

நாடளாவிய ரீதியில் அண்மையில் பெய்த மழையை அடுத்தே டெங்குத் தொற்றின் தாக்கம் தேசிய ரீதியில் உணரப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இந்த வருடத்தில் மாத்திரம் 23 ஆயிரத்து 118 டெங்கு நோயாளர்கள் இதுவரை பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். பொதுமக்கள் தமது சுற்றுப்புறம் தொடர்பில் எச்சரிக்கையாக இருப்பதன்மூலம், இந்தப் பேரிடரில் இருந்து விடுபடமுடியும் என்று தெரிவித்துள்ள டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு, வேண்டிய ஒத்துழைப்பை வழங்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கையும் விடுத்துள்ளது. நாட்டின் பொருளாதார நலிவு நிலையால் மருந்துவத்துறை பெரும் பாதிப்புக்குள் தள்ளப்பட்டுள்ள நிலையில், டெங்குத்தொற்றும் தீவிரமானால் அது பெரும் தாக்கத்தைச் செலுத்தும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ய)

# கஜமுத்துக்களுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, மே 30

அம்பாறையில் 76 கஜமுத்துக்களை வைத்திருந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் ஒரு முத்து ஒரு மில்லியன் முதல் ஐந்து மில்லியன் ரூபா வரை விற்பனை செய்யப்படுவதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை அம்பாறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-14-இ)

# 204 காவலர்கள் பயிற்சி நிறைவு

கொழும்பு, மே 30

சிறைச்சாலைகள் திணைக்களத்துக்கு ஆள்சேர்ப்புச் செய்யப்பட்ட 204 பயிற்சிக் காவலர்கள் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல் தெனிய தலைமையில், அங்குணகொலபெலஸ்ஸ சிறைச்சாலைப் பயிற்சிப் பாடசாலையில் அவர்கள் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர். 181 ஆண்களும் 23 பெண்களும் இவ்வாறு பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-க-இ)



# ஊடகவியலாளர் நடேசனின் கட்டுரை தொகுப்பு வெளியீடு

மட்டக்களப்பு, மே 30

2004ஆம் ஆண்டு மே மாதம் சுட்டுக் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது நினைவு தினம் நாளை நினைவுகூரப்படவுள்ள நிலையில் நேற்று 'ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்' கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியிடப்பட்டுள்ளது.

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஐயாத்துரை நடேசனின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, சுடரேற்றப்பட்டதைத் தொடர்ந்து மலரஞ்சலி செலுத்தப்பட்டு, மௌன அஞ்சலியும் இடம்பெற்றது. பின்னர் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியமும், சிவராம் ஞாபகார்த்த மன்றமும் (சுவிஸ்) இணைந்து வெளியிடவுள்ள 'ஊடகர் ஜீ.நடேசன் நினைவலைகள்' கட்டுரைத் தொகுப்பு நூல் வழங்கப்பட்டது. (எ-இ)

# 15 வயதுச் சிறுமி கர்ப்பம்: பூசகருக்கு விளக்கமறியல்

அம்பாறை, மே 30

15 வயதுடைய சிறுமியை காதல் வலையில் வீழ்த்தி, கர்ப்பமாக்கினார் என்ற குற்றச்சாட்டில் பூசகரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும் உடந்தையாக இருந்த பூசாரியின் தாயாருக்குப் பிணை வழங்கியும் கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

சிறுமியின் தந்தை வழங்கிய முறைப்பாட்டையடுத்து, சேனைக்குடியிருப்புப் பகுதியில் வசிக்கும் 20 வயதுடைய சந்தேகநபரான கோயில் பூசகரும், அவரது தாயாரும் கைதாகினர்.

சிறுமியின் தாயார் வெளிநாட்டுக்குப் பணிப்பெண்ணாகச் சென்றுள்ள நிலையில், தந்தையார் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றார். தனிமையில் இருந்த சிறுமியை சந்தேகநபரான பூசகர் கர்ப்பமாக்கியுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (க-இ)



# கல்விக்கு நிதிசேகரிக்க கிளிநொச்சியில் மரதன்

கிளிநொச்சி, மே 30

பிரித்தானியா - எடின்புரோ நகரத்தில் நடைபெறும் வடக்கு - கிழக்கு மாகாண மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கான நிதி சேகரிப்பு மரதன் ஓட்ட நிகழ்வுக்கு வலுச்சேர்க்கும் முகமாக கிளிநொச்சியிலும் மரதன் ஓட்ட நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பரந்தன் சந்தியில் இருந்து பசுமைப்பூங்கா வரை இந்த மரதன் ஓட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ம-14-113)



# மடிக்கணினிகள் வழங்கலும் திறன்வகுப்பறைத் திறப்பும்

கொடிகாமம், மே 30

வரணி பிரதேசத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கு, மடிக்கணினிகள் வழங்கும் நிகழ்வும் இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய கணினி திறன் வகுப்பறைத் திறப்பு விழாவும் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய மண்டபத்தில் நேற்று இடம்பெற்றன.

வரணி ஒன்றியத்தின் பிரிட்டன் கிளையால், தரம் 5இல் வெட்டுப்புள்ளிக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற 16 மாணவர்களுக்கு மடிக்கணினியும், இவர்களில் வரணி பிரதேச பாடசாலைகளில் தரம் 6இல் கல்வியைத் தொடரவிருக்கும் 6 மாணவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா பணமும் மடிக்கணினிகளும் வழங்கப்பட்டன.

தொடர்ந்து 15 லட்சம் ரூபா பெறுமதியான திறன் வகுப்பறைக்கான உபகரணங்கள் கையளிக்கப்பட்டு, திறன் வகுப்பறையும் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வின் ஒரு பகுதியாக மாணவர்களும், விருந்தினர்களும் இணைந்து மரக்கன்றுகளை நட்டனர். வரணிப் பிரதேச அயற்பாடசாலை அதிபர்களும் பாராட்டு நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (க-159)



# ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் கிளைக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 30

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட கிளைக் கூட்டம் சுன்னாகம் தனியார் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதன்போது ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அரசியல் செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன் நாட்டினுடைய தற்கால அரசியல் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் விளக்கமளித்தார். மேலும் கட்சியின் மாவட்ட அங்கத்தவர்களோடு சமகால அரசியல் நிலை தொடர்பிலும் கட்சியின் செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பா.கஜதீபன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர். (ம-14-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org























விசுவமடு தென்னிந்தியத் திருச்சபை ஆலயத்தின் முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. (ம-14,113)



சோலைநகர் சவாரித்திடல்

## வனவளத்திணைக்கள ஆக்கிரமிப்பை நேரில் பார்வையிட்டார் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி,மே 30

கிளிநொச்சி - சோலைநகர் சவாரித்திடலில் வனவளத் திணைக்களம் ஆக்கிரமிப்புச் செய்துள்ள நிலையில், அந்தப் பகுதிக்கு நேரில்சென்று பார்வையிட்டார் நாடாளு மன்ற உறுப்பினர் சி.சிறீதரன். சோலைநகரில் நீண்டகால மாக காணப்பட்ட சவாரித் திடல் பகுதிக்குள் வனவளத் திணைக்களம் எல்லையிட் டுள்ளது.

இதனால் அங்கு சவாரிப்போட்டி கள் நடத்த முடியவில்லை என்று அந்தப்பகுதி மக்களால் சிறீதரனுக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து அங்கு சவாரித்திடல் அமைப்பதன் இடர் பாடுகள், அதனை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்பன தொடர்பில் சிறீதரன் துறை சார் ஆர்வலர்கள் சகிதம் அந்தப் பகுதிக்குச் சென்று பார்வை யிட்டார். (ம-14)



## 'புரட்சினி நீ' நூல் வெளியீட்டு விழா!

மன்னார், மே 30

பேசாலை 'விழிகள் கலாமுற்றம்' அமைப்பின் ஏற்பாட்டில் மாக்கஸ் டிவைன்சியால் ஆக்கம் செய்யப்பட்ட 'புரட்சினி நீ' என்ற கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன்தினம் மன்னார் பேசாலையில் இடம்பெற்றது

'விழிகள் கலாமுற்றம்' அமைப்பின் இயக்குநர் தேசிய கலைஞர் 'சாஹித்யா' எஸ்.ஏ.உதயன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக மன்னார் மாவட்டச் செயலர் அ.ஸ்ரான்லி டிமெல், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ம-14,60)





இருபாலை –கோப்பாய் தென்கோவை கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த வியாழக்கிழமை பக்தர்கள் சூழ இடம்பெற்றது. பின்னர் கலை நிகழ்வுகளும் ஆலயத்தில் நடைபெற்றன. (ம)

## வீதிச் சுற்றுவட்டத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்துக்கு முன்பாகவுள்ள சுற்றுவட்டத்தை மீள மைத்து அழகுபடுத்தும் செயற்றிட்டத் துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

ரில்கோ தனியார் விடுதியின் உரிமை யாளர் திலகராஜின் நிதிப்பங்களிப்பில் மீளப் புனரமைக்கப்படவுள்ள சுற்று வட்டத்தின் நடுவே திருவள்ளுவரின் சிலை நிறுவப்படவுள்ளது.



யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் முன்னெடுக்கப்படும் 'தூய நகரம் அழகிய மாநகரம்' என்ற அபி விருத்திச் செயற்றிட்டத்தில் யாழ். மாநகர சபைக்குட்பட்ட சுற்றுவட்டங் களை அழகுபடுத்தும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக இது மேற்கொள்ளப் படவுள்ளது.

நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், ரில்கோ தனியார் விடுதியின் உரிமையாளர் திலகராஜ், யாழ்.மாநகர ஆணையாளர் த.ஜெய சீலன், மாநகரசபை உறுப்பினர்கள் எனப்பலர்கலந்துகொண்டனர். (ம-14,20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 09 . 01 . 1936

ஆண்டவன் அடியில் 26 . 05 . 2022



## திருமதி செல்லத்துரை பரமேஸ்வரி

துறைமுகம், மாதகலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை பரமேஸ்வரி கடந்த (26.05.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், மங்கயற்கரசி, காலஞ்சென்ற யோகரத்தினம் மற்றும் குணரத்தினம், தவரத்தினம், காலஞ்சென்ற நேசரத்தினம், மற்றும் வளர்மதி, துரைரத்தினம் வாசுமதி, நவரத்தினம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நகுலராசா, காலஞ்சென்ற தவராணி மற்றும் மீனாட்சி, சிவநேசச்செல்வி, ராகினி, மனோன்மணி, காலஞ்சென்ற துரைரத்தினம் மற்றும் சாந்தினி, கருணாநிதி, லதா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2022) திங்கட்கிழமை காலை 09.00 மணிக்கு மாதகல் துறைமுகம் சந்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துறைமுகம்,**
**மாதகல்.**

தகவல் :
**குடும்பத்தினர்**
**077 405 5782**

(cs1022) (2.6)

# ஈரவிழிகளில் ஈராண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 12 . 10 . 1944

மனம் நெகிழ 30 . 05 . 2020



## அமரர் சுரேந்திரன் நடராஜா

(மொழிபெயர்ப்பாளர் - கிளாக்கர்)

ஈரவிழி காயவில்லை இழந்த துயர் மீளவில்லை
இது தானோ வாழ்க்கை என எங்கள் மனம் பேதலிக்க
ஈராண்டு சென்றதுவோ பூமித் தாய் மடி மீது
நீர் துயில் கொள்ளச் சென்று
தெய்வத்தால் தரப்பட்ட தெய்வம் நீங்கள் என்றதனால்
சாகாவரம் பெற்று வாழ்கின்றீர் எம் உள்ளமதில்
நீலக் கடலும் நீள் வானமும் உள்ளவரை
நினைவழிய மாட்டீர்கள் அப்பா
பாசத்து உறவுகளைப் பாங்கோடு காத்துநின்றீர்
எம்மைப் பரிதவிக்க விட்டு வானுலகை சென்றுவிட்டீர்
நீராகிப் போனீர் என நினைப்பதற்கு இயலவில்லை
பேறாகப் பெற்ற பெருந்தகையே அப்பாவே
இல்லை என்று சொல்ல எதுவுமில்லை எங்களிடம்
அத்தனையும் இழந்துவிட்டோம் உங்களை இழந்ததனால்
நீங்களோ நாராயணன் பாதங்களில் பெரும்பேறு பெற்றுய்ய
நாங்களோ உங்களைத் தேடி...........

**47, பழைய யாழ்வீதி,**
**சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.**

**மனைவி, மக்கள்,**
**பேரர், பெறாமக்கள்.**

S. புஸ்பராணி - 076 663 5996
விவேகரமணன் - + 3362 403 9679
வித்தியாரமணன் - 4474 9518 6321

(cs.19744) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 20 . 11 . 1946

மறைவு 27 . 05 . 2022



## திருமதி இராஜேஸ்வரி ஆறுமுகராசா

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி ஆறுமுகராசா கடந்த (27.05.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலாயுதர் சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், ஆறுமுகராசாவின் அன்பு மனைவியும், பிருந்தாவன் (லண்டன்), பிறேமினி, பிரவீணா ஆகியோரின் பாசமிகு தாயாரும், நாகேஸ்வரி, இரத்தினேஸ்வரி (அவுஸ்திரேலியா), கந்தராசா (அவுஸ்தி ரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.05.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கைதடி வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊத்தல் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஸ்ரீஸ்வரிவாசம்"
**கைதடி வடக்கு,**
**கைதடி.**

தகவல் :
**குடும்பத்தினர்**
**077 646 5331**

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 04 . 1967

மறைவு 26 . 05 . 2022



## திருமதி கமலவதனி சுந்தர்ராஜ்

B.Com. PGDE

(முன்னாள் ஆசிரியை - அல்ஹிலால் மத்திய கல்லூரி- நீர்கொழும்பு)

நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலவதனி சுந்தர்ராஜ் கடந்த (26.05.2022) அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி கனகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், சுந்தர்ராஜ் அவர்களின் அன்பு மனைவியும், விகாசனின் பாசமிகு தாயாரும், கருணாநிதி (கனடா), கமலபூஷணி (கனடா), கமலவேணி (கனடா), சத்தியவாணி (ஆசிரியை - இலங்கை) ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (01.06.2022) புதன்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:

| | | | |
|---|---|---|---|
| துணைவர் | - சுந்தர்ராஜ் | (லண்டன் | - 0044 7944 735 596) |
| மகன் | - விகாசன் | (லண்டன்) | |
| சகோதரன் | - கருணாநிதி | (கனடா | - 0016 475 693 748) |
| அத்தான் | - சதானந்தன் | (கனடா | - 0014 168 356 418) |
| சகோதரி | - கமலவேணி | (கனடா | - 0016 472 484 020) |
| சகோதரி | - சத்தியவாணி | (இலங்கை | - 0094 779 365 603) |
| மாமா | - ஆறுமுகம் | (இலங்கை | - 0094 771 844 185) |
| மாமா | - கதிரேசபிள்ளை | (இலங்கை | - 0094 778 013 180) |

(cs44836) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடத்தப்பட்டவர்...

யப்பட்டிருந்த நிலையில், அவர் நேற்று வீடு திரும்பியுள்ளார்.

இந்தக் கடத்தலுடன் தொடர்புடைய மூன்று பேரை சந்தேகத்தில் பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைந்திருந்தனர்.

இந்த நிலையில் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில், கடத்தப்பட்ட இளைஞன் கஞ்சா தருவதாகத் தெரிவித்து 3 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக்கொண்டு ஏமாற்றியுள்ளான். பணத்தைக் கொடுத்தவர்கள் நெருக்கடி கொடுக்கவே போலியாகத் தயார் செய்த கஞ்சாவை வழங்கியுள்ளான். இதனால் பணத்தைக் கொடுத்த தரப்பினர் ஆத்திரமடைந்து இளைஞனைக் கடத்திச் சென்று 3 லட்சம் ரூபா பணத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் விடுவித்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸார் தமது விசாரணைகளை மேலும் தீவிரப்படுத்தியுள்ளனர். (அ-ஒ-125)

## நிறைவேற்றதிகார...

மற்றும் வழிமுறைகள் தொடர்பில் கட்சித் தலைவர்களால் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையிலேயே அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டார்.

'நாட்டில் உள்ள முக்கிய பிரச்சினைகள் பொருளாதாரத் துறையில் மட்டுமல்ல அரசியல் வட்டாரத்திலும் உள்ளன. 19 ஆவது திருத்தச் சட்டத்தை மீள அறிமுகப்படுத்துவது இதில் பிரதான விடயமாகும். இதற்கான முன்னேற்பாடாக 21 ஆவது திருத்தச்சட்டம் இயற்றப்பட்டுவருகின்றது. இரண்டாவது விடயம், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான முயற்சியாகும். அதற்கான நேரம் மற்றும் வழிமுறைகள் கட்சித் தலைவர்களால் தீர்மானிக்கப்பட வேண்டும். 20ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பலவீனப்படுத்தப்பட்டதன் காரணமாக நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் முடங்கியுள்ளன. நிறைவேற்றதிகாரத்துக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, பொருளாதார நெருக்கடியை தடுக்கும் வகையில் நாடாளுமன்றம் செயற்படவில்லை என்பதே இன்றைய பிரதான குற்றச்சாட்டு. நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சிக்கு பெரும்பான்மை இருந்தும், நாடாளுமன்றப் பணிகளை புறக்கணித்ததாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது-என்றார். (அ-ஒ-44)

## பலாலி விமான...

விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை பொருளாதார நெருக்கடி காரணமாக மூடவுள்ளதாக ஊடகங்களில் தகவல் வெளிவந்திருந்த நிலையில் அது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

'இலங்கையிலுள்ள எந்தவொரு விமான நிலையத்தையோ, தொழிற்சாலையையோ, அரசாங்க நிறுவனத்தையோ மூடும் திட்டம் எதுவுமில்லை' என்று பிரதமர் பதிலளித்தார்.

கொரோனா காரணமாக 2020ஆம் ஆண்டு மார்ச் மாதத்துடன் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது. இன்னமும் தமிழகத்துக்கான சேவைகள் மீள ஆரம்பிக்கவில்லை. உள்ளூர் சேவைகளே இடம்பெற்றுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5-22)

## தமிழக...

மூலம் யாழ்ப்பாணத்தை இன்று காலை வந்தடையும். அவை உடனடியாக பிரதேச செயலகங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களுக்கு இன்று மாலையே விநியோகிக்கப்படும் என்று மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-ஒ-5)

## திருடர்களைக்...

பதவி விலக வேண்டும். இவ்வாறு வலியுறுத்தி மருத்துவ பீட மாணவர்களால் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது. பேரணியைக் கலைப்பதற்காக போராட்டக்காரர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப் புகை தாக்குதல் என்பன பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டதால் பதற்ற நிலை உருவானது.

'நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும், ஜனாதிபதி, பிரதமர் உள்ளடங்கலான அரசாங்கம் பதவி விலக வேண்டும்.' என வலியுறுத்தி கொழும்பு, தாமரைத் தடாக வளாகத்திலிருந்து மருத்துவபீட மாணவர்களின் ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது.

கொழும்பு, கோட்டையிலுள்ள உலக வர்த்தக நிலையத்துக்கு முன்பாக, இலங்கை வங்கி மாவத்தை ஊடாக காலிமுகத்திடல் நோக்கிச் செல்வதற்கு முற்பட்டனர். அவ்வழியில் வீதித்தடை அமைக்கப்பட்டிருந்தது. பொலிஸார், கலகமடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் மருத்துவபீட மாணவர்கள் வீதத்தடைகளை அகற்றி முன்னோக்கி நகர்வதற்கு முற்பட்ட வேளை, முதலில் நீர்த்தாரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதன்பின்னர் கண்ணீர்ப்புகை தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் பதற்ற நிலை உருவானது.

'இந்த அரசாங்கத்தை விரட்டும்வரை ஓயப்போவதில்லை' என மாணவர்கள் சூளுரைத்தனர்.

இதேவேளை- நேற்றுமுன்தினமும் இதேயிடத்தில் "கோத்தா கோ கமவின்" 50ஆவது நாளை முன்னிட்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் பங்கேற்றோர் மீதும் பொலிஸார் கண்ணீர்ப்புகைக்குண்டு தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-44)




'ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ'

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 • 04 • 1940

உதிர்வு 10 • 06 • 2021



சிவகீத அடியார், இசைநாத இன்பமாமணி, திருவருட்செல்வர், பண்ணிசைக் கலைஞர்

**அமரர் வல்லிபுரம் நடராசா**

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

**திதி: அமாவாசை**

சிங்காரக் குரல் கொண்டு
தங்குநிறை ஓங்கு புகழ் பூண்டு
வாயார இறைபாடிய எந்தையே - நீர்
மரித்துப்போய் ஆனதோ ஓராண்டு
ஆறாத அல்லலிது தீராத இன்னலிது
நாளெல்லாம் உம் நினைவில்
தோய்கின்றோம் மக்களொன்றாய்.

**இல.106, கலைமகள் வீதி,**
**அரியாலை யாழ்ப்பாணம்.**

குடும்பத்தினர்

(cs 1020) 2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு 11 * 09 * 1948

இறப்பு 28 * 05 * 2022



## திருமதி. பத்மலோசனி கஜேந்திரநாதன்

(முன்னாள் ஆசிரியை - வவுனியா இறம்பைகுளம் மகளிர் மகா வித்தியாலயம்)

யாழ் இணுவில் பிறப்பிடமாகவும் யாழ் அத்தியடி புதுவீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. பத்மலோசனி கஜேந்திரநாதன் (முன்னாள் ஆசிரியை வவுனியா இறம்பைகுளம் மகளிர் மகா வித்தியாலயம் (Convent) அவர்கள் சனிக்கிழமை (28.05.2022) அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற முத்தையா கஜேந்திரநாதன் அவர்களின் பாசமிகு அன்பு மனைவியும் ஐங்கரன், தர்சினி, துசிகரன், வினோகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சசி, ஞானசேகரன், ஆத்திகா, அவர்களின் பாசமிகு மாமியாரும், கௌதமன், மயூரன், துவானிகா அவர்களின் பாசமிகு பேத்தியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் திங்கட்கிழமை (30.05.2022) காலை 9.00 மணி முதல் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 1.00 மணிக்கு தகனக்கிரியைக்காக பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குடும்பத்தினர்

T.p:- 0767517775


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுப்பிட்டியில்...



ஆரியரத்தினம் திருக்குமார் (வயது - 36) என்ற இளைஞன் உயிரிழந்ததுடன், நல்லூர் கந்தன் குளத்தைச் சேர்ந்த ரட்ணசீலன் சுஜீபன் (வயது - 24) என்ற இளைஞர் காயமடைந்துள்ளார்.

வேகமாக பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகிலுள்ள பஸ் தரிப்பு நிலையத்துடன் மோதுண்டது. சம்பவ இடத்திலேயே மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞர் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் பயணித்த மற்றைய இளைஞர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் முழுமையாகச் சேதமடைந்துள்ளது. (அ-ஒ-125)

பொருளாதார...

டித் தீர்வுகள் தொடர்பில் எந்த விடயங்களையும் தெரிவிக்கவில்லை. இது தொடர்பில் மக்கள் பெரும் எதிர்பார்ப்பில் இருந்தபோதும், பிரதமரின் உரை ஏமாற்றமாக அமைந்துள்ளது. இதேவேளை- 'சிஸ்டம் சேஞ்' தொடர்பில் நீண்டகால யோசனைகளை பிரதமர் தனது உரையில் முன்வைத்தார்.

அவரது உரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

**சுதந்திரத்துக்கு முன்னரான அரசமைப்புச் சபை**

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் 1931 முதல் 1947 வரை அரசமைப்பு சபை இருந்தது. அந்த சபையானது குழு முறையைப் பின்பற்றிச் செயற்பட்டது. பொதுப் பணத்தைக் கட்டுப்படுத்த கணக்குக் குழுவும் இருந்தது. அந்த நேரத்தில் இந்த வழிமுறையை வெற்றிகரமாகச் செயற்படுத்த எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது.

நாடாளுமன்றத்தின் கட்டமைப்பை மாற்றி, தற்போதுள்ள நாடாளுமன்ற முறை அல்லது வெஸ்ட்மின்ஸ்டர் முறை மற்றும் அரசமைப்பு முறை ஆகியனவற்றை இணைத்து புதிய அமைப்பை உருவாக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நாடாளுமன்றம் நாட்டை ஆள்வதில் பங்கேற்கலாம்.

**சட்டங்களை வலுப்படுத்தல்**

முதலாவதாக, நாணய அதிகாரங்களைப் பயன்படுத்துவதில் நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்குவதற்கு தற்போதுள்ள சட்டங்கள் வலுப்படுத்தப்பட வேண்டும்.

பிரிட்டன், நியூஸிலாந்து மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி, நாங்கள் வலுவான மற்றும் சக்திவாய்ந்த சட்டத்தை முன்மொழிகிறோம்.

தற்போது அரசு நிதி தொடர்பாக மூன்று குழுக்கள் உள்ளன. பொது நிதிக் குழு, கணக்குக் குழு மற்றும் பொது நிறுவனங்களுக்கான குழு ஆகிய மூன்று குழுக்கள் ஆகும். இந்த மூன்று குழுக்களின் அதிகாரங்களை பலப்படுத்துவதற்காக சபைத் தலைவர் தினேஷ் குணவர்த்தன பல யோசனைகளை முன்வைத்துள்ளார். இதற்கு மேலதிகமாக சில பரிந்துரைகளை நாம் முன்வைக்கிறோம்.

**புதிய குழுக்கள்**

நிதி விவகாரங்கள் தொடர்பாக இரண்டு புதிய குழுக்களை அமைக்க நாங்கள் செயற்பட்டு வருகிறோம். இந்த விவகாரம் குறித்து ஆய்வு செய்ய சட்ட மற்றும் வழிமுறைக் குழுவை நியமிப்போம்.

இரண்டாவதாக, நாம் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினை வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிதி நிலை. பலவீனமான பிரச்சினைகள் பல இதில் உள்ளன. எங்களின் நிலையியற் கட்டளை III இன் கீழ் நாம் மேற்பார்வைக் குழுக்களை நியமிக்க முடியும். இதற்கு முன் கண்காணிப்புக் குழுக்கள் நியமிக்கப்படவில்லை. எனவே, பத்து மேற்பார்வைக் குழுக்களை நியமிக்க நாங்கள் முன்மொழிகிறோம். அதற்கு நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஐந்து நிதிக் குழுக்கள் மற்றும் பத்து மேற்பார்வைக் குழுக்களின் தலைவர்கள் பின்வரிசை உறுப்பினர்களால் நியமிக்கப்படுகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்கள் அமைச்சர்களால் நியமிக்கப்படுவதில்லை.

எனவே, அமைச்சர்கள் அமைச்சரவையில் இருந்து சுயாதீனமான மற்றும் அமைச்சர் மற்றும் நாடாளுமன்றம் ஆகிய இருவருடனும் இணைந்து செயற்படும் ஒரு வழிமுறையை உருவாக்க எங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

**போராடுபவர்களும் பங்கேற்கலாம்**

தற்போதுள்ள அமைப்பை மாற்ற (சிஸ்டம் சேஞ்) வேண்டும் என இளைஞர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். அவர்கள் தற்போதைய பிரச்சினைகளையும் அறிய விரும்புகிறார்கள். எனவே, இந்த 15 குழுக்களுக்கும் தலா நான்கு இளைஞர் பிரதிநிதிகளை நியமிக்க நான் முன்மொழிகிறேன்.

அவர்களில் ஒருவர் இளைஞர் நாடாளுமன்றம் ஊடாக நியமிக்கப்படுவார். மற்ற மூவரும் போராட்டக் குழுக்கள் மற்றும் பிற ஆர்வலர் குழுக்களைச் சேர்ந்தவர்கள். இந்த நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறையை இளைஞர் அமைப்புகளே தீர்மானிக்கமுடியும்.

அத்துடன், குறிப்பிட்ட துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களை இந்தப் பணியில் ஈடுபடுத்தலாம் என்று நம்புகிறோம். இப்பணியின் மூலம் இளைஞர்கள் தாங்களாகவே பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வுகளை வழங்க முடியும். அவர்கள் விரும்பினால் தேர்தலில் போட்டியிட முடியும்.

**தேசிய சபை**

தேசிய சபையையும் நாங்கள் முன்மொழிகிறோம். சபாநாயகர், பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அடங்கிய குழு தேசிய சபை என்று அழைக்கப்படுகிறது.

தேசிய சபை மிகவும் முக்கியமானது என்றே கூற வேண்டும். நாட்டின் கொள்கைகள் குறித்து இதில் பேசலாம். அமைச்சரவையின் முடிவுகள் குறித்தும் பேசலாம். இந்நாட்டின் நாடாளுமன்ற மறுசீரமைப்பு குறித்தும் பேசலாம். அப்படியானால், அதை அரசியல் அமைப்பு என்று சொல்லலாம். அமைச்சர்கள் மற்றும் குழுக்களின் தலைவர்களை அழைக்க தேசிய சபைக்கு உரிமை உண்டு.

**ஜனாதிபதி பொறுப்புக்கூற வேண்டும்**

நாம் முன்வைத்துள்ள புதிய முறைமையின்படி ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு பொறுப்புக்கூற வேண்டும். அமைச்சர்களின் அமைச்சரவையும் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும். தேசிய சபை நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும். பதினைந்து குழுக்கள் மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

அமைச்சரவை மூலம் அரசாங்கத்தை கட்டுப்படுத்தவும், ஜனாதிபதியின் பணிகளை ஆராயவும், தேசிய சபையின் மூலம் அரசியல் விவகாரங்களை மேற்பார்வையிடவும், பதினைந்து குழுக்களின் நிதி விவகாரங்கள் மற்றும் பிற விடயங்களை மேற்பார்வையிடவும் ஒரு அமைப்பு உள்ளது- என்றார். (அ-ஒ-44)

ம.எண்ணெய்...

என்று தெரிவிக்கப்படுகின்றது.

33 ஆயிரம் லீற்றர் தொகுதி மண்ணெண்ணெய் ஏற்கனவே எடுத்து வரப்பட்ட மண்ணெண்ணெய் மீனவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அடுத்த கட்டமாக 33ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை -இதன் தொடர்ச்சியாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் மண்ணெண்ணெய் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5)


எழுகை அறிவாலயம்
மாலை நேர கற்கை நெறி
திறப்புவிழா -27.05.2022
முத்துமாரி நகர் புளியங்குளம்
எழுகை சுவிஸ் நிறுவனத்தின் ஊடாக
திரு.சின்னப்பு யோகராசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
எழுகை இலங்கை நிர்வாகம்
(cs.1017) (2.6)



மணிவிழா வாழ்த்து




திருமதி திரிபுவனபெருந்தேவி இராஜசிங்கம் (ஆசிரியர்)
(B.A) (PGDE) - SLTS -I

டிறிபேக் கல்லூரியில் கல்விப் பணியினை
அர்ப்பணிப்புடன் மேற்கொண்டு இன்று
மணிவிழாக் காணும் எமது ஆசிரியை
கண்ணியமாய் கடமைதனைச் செய்து
பணியில் மேன்மை பெற்று நேசமுடன்
- கற்பிக்கும் மாதரசி
உண்மை, நேர்மை, கருணையோடு உள்ளத்தில்
கொண்டொழும் ஆசிரியைக்கு
எமது மணிவிழா வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்:
வட்ட மேசை
யா / டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி.
(cs36035) (2.6)



ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு

2022 ஆம் ஆண்டுக்கான உயர்திருவிழாக் காலத்தில் தற்காலிக கடைகள் அமைத்தல், உடைதேங்காய் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றுக்கான ஏலம் கூறுதல்.

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலின் வருடாந்த உயர்திருவிழா 29.06.2022 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 14.07.2022 ஆம் திகதியன்று நிறைவு பெறவுள்ளது.

இக்காலப்பகுதியில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு நிர்வாகத்தினரால் சுட்டிக்காட்டப்படும் இடங்களுக்கான பகிரங்க ஏலம் கூறுதலும், உடைதேங்காய்க்கான பகிரங்க ஏலம் கூறுதலும் 04.06.2022 ஆம் திகதியன்று காலை 10.30 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறும். ஏலத்தில் பங்கு கொள்ள விரும்புவோர் குறிப்பிட்ட நேரத்தில் தவறாது சமூகமளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு:-

1).குளிர்பானக்கடைகள் நடத்துவதுபவர்கள் முறையான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டிருத்தல் வேண்டும்.சுகாதாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

2). தேநீர்க்கடைக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

3). ஏலத்தில் முதல் நிலை பெற்றவர்கள் அன்றைய தினமே ஏலத்தொகையின் மூன்றில் ஒரு (1/3) பங்கினைச் செலுத்திப்பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினைப் பத்தாவது நாள் திருவிழாவிற்கு முன்னதாகச் செலுத்தி முடிக்க வேண்டும்.

அன்னையின் பணியில்
திரு.ந.மோகனரூபன், செயலாளர், அறங்காவலர்சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நண்பன் அமெரிக்கா: இக்கட்டான நேரத்தில் ஆதரவு தொடரும்

## வெளிவிவகார அமைச்சரிடம் அந்நாட்டு தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

அமெரிக்கா இலங்கையின் நண்பன். நாட்டிலுள்ள சவால்களை நன்கு புரிந்து கொள்கின்றோம். இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும். இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவருக்கும், வெளிவிவகார அமைச்சருக்குமான சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

மக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைப் போக்குவதற்கும், தெளிவான செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் குறுகிய மற்றும் நீண்ட கால தீர்வுகளை வழங்குவதற்கு சாத்தியமான அனைத்து வழிகளையும் ஆராய்வதில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இவ்வாறானதொரு நிலையில், பலதரப்பு நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகத்திடமிருந்து கிடைக்கப்பெறும் ஒத்துழைப்புக்களுக்கு அமைச்சர் பீரிஸ் பாராட்டு தெரிவித்தார். இலங்கையின் பொருளாதார சவால்களைத் தணிப்பதற்காக இருதரப்பு மற்றும் பலதரப்பு வழிகள் மூலம் அமெரிக்கா மற்றும் ஏனைய நாடுகளின் தொடர்ச்சியான ஆதரவை அமைச்சர் ஊக்குவித்தார்.

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கின் ஆட்சியை மேம்படுத்துவதற்கும் பேணுவதற்கும் அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகள் குறித்தும், கருத்துச் சுதந்திரம் மற்றும் ஒன்றுகூடுதல் ஆகியவற்றுக்கான அனைவரினதும் உரிமைகளையும் மதிக்கும் முயற்சிகள் குறித்தும் அமைச்சர் பீரிஸ் அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கினார்.

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பாக பல்வேறு அரசியல் கட்சிகளுடனான கலந்துரையாடல்கள் தொடர்பிலும் அவர் தூதுவருக்கு விளக்கமளித்தார். தற்போதைய பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் நல்லிணக்கம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசாங்கம் முழுமையாக அர்ப்பணிப்புடன் இருப்பதாக அமைச்சர் தூதுவரிடம் உறுதியளித்தார்- என்றுள்ளது. (ஒ-இ)





# ஊடகர் நடேசனின் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 30

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் 18ஆவது நினைவேந்தலும் நூல் வெளியீடும் யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று மாலை 4 மணியளவில் நடைபெற்றது.

நடேசன் தொடர்பில் அவருடன் ஊடகப்பணியாற்றிய சக ஊடகவியலாளர்கள், செயற்பாட்டாளர்களென பலரது நினைவுசுரலுடன் வெளிவந்துள்ள நூல் அறிமுகமும் வெளியீடும் நடைபெற்றது.

அதேவேளை 'நடேசனின் ஊடகத்துறை பயணம்' தொடர்பிலான நினைவுரைகளுடன் ஞாபகார்த்த நினைவுப்பேருரையை யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை மூத்த விரிவுரையாளர் கோசலை மதன் ஆற்றினார்.

நிகழ்வின் இறுதியாக ஊடகவியலாளர்களது தயாரிப்பில் உருவாக்கப்பட்ட ஆவணப்படகாட்சிப்படுத்தல் இடம்பெற்றது. (ஒ-26)

## 21ஆம் திருத்தம்:

# நாடாளுமன்றில் இல்லாத கட்சிகளுடனும் பேச்சு

கொழும்பு, மே 30

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் பிரதிநித்துவம் இல்லாத அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் தெரிவு செய்யப்படாத அரசியல் கட்சிப் பிரதிநிதிகளின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் அரசாங்கம் இந்த வாரம் பெற்றுக் கொள்ளவுள்ளது.

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் தொடர்பில் சிவில் சமூக குழுக்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு பேச்சு நடத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். (ஒ-இ)

# வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், மே 30

குருநகர் புனித அன்னை வேளாங்கன்னி ஆலய வருடாந்த திருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்னையின் திருவிழாத் திருப்பலி காலை 6 மணிக்கு திருச்செபமாலையோடு ஆரம்பமாகும் என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)

# தென்னிலங்கை தொழிற்சங்கவாதிகள் வடக்கில் பலதரப்புக்களுடன் சந்திப்பு

தென்னிலங்கையைச் சேர்ந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் வடக்கு மாகாணத்தில் பல்வேறு தரப்பினரையும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தென்னிலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படும் போராட்டங்களுக்கான ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இந்தச் சந்திப்புக்கள் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளை, தென்னிலங்கை தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சந்தித்தனர். அதன் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் அவர்கள் சந்தித்தனர். (ஒ-5)

## நிறைவேற்றதிகாரத்தை...

கண்டி, தலதாமாளிகைக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, வழிபாடுகளின் பின்னர், அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் மற்றும் சங்க சபையினருடன் அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கை குறித்து கலந்துரையாடினார். இதன்போதே அஸ்கிரிய பீடத்தின் சார்பில் இந்த விடயம் குறிப்பிடப்பட் டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்படக்கூடாது. ஆனால், ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கலாம் என்றும் இதன்போது அஸ்கிரிய பீடத்தினரால் நீதி அமைச்சருக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 21ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பிலுள்ள சந்தேகங்கள் பற்றியும் தேரர்கள், நீதி அமைச்சரிடம் விளக்கம்கோரி அதற்குரிய பதில்களைப் பெற்றுக் கொண்டனர். (அ-ஒ-44)

## மஹிந்த...

வல் வெளியிட்டுள்ளது. இதற்கு அமைவாக அவரது இரகசிய தங்குமிடம் மற்றும் அவரது உத்தியோகபூர்வ இல்லங்களின் பாதுகாப்பு பன்மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ச மீது தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் அதிருப்தியில் உள்ளதாக புலனாய்வுப் பிரிவுக்கு தகவல் கிடைத்துள்ளது. அவர் பயணிக்கும் இடங்களிலும் நிரந்தரமாக தங்கியிருக்கும் இடங்களிலும் பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் மீது எந் [illegible] தப்படலாம் என [illegible] எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனையடுத்து, பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள மஹிந்த ராஜபக்சவின் வீட்டுக்குச்செல்லும்பாதையை மறைக்கும் வகையில் வீதித் தடைகளை அமைக்குமாறு மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பணிப்புரை விடுத்துள்ளார். (அ-ஒ-இ)

## ஜனாதிபதி...

காத வகையிலேயே 21ஆம் திருத்தம் நிறைவேற்றப்படும். இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் உட்பட அநுநாயக்க தேரர்களை சந்தித்து, 21 ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே [illegible] கூறினார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகினால், அடுத்த ஜனாதிபதியை நாடாளுமன்றம் தெரிவுசெய்ய வேண்டும். நாடாளுமன்றத்தில் தற்போது மொட்டுக் கட்சி வசமே பெரும்பான்மை பலம் உள்ளது.

எனவே, அடுத்த ஜனாதிபதி குறித்த ஐயப்பாடு உள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க வேண்டுமானால் சர்வஜன வாக்கெடுப்புக்கு செல்ல நேரிடும். எனவே, 21 ஐ ஆரம்பப் புள்ளியாகக் கருதலாம்.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவதற்கு தடை விதிக்கப்படும். இது தொடர்பில் அழுத்தங்கள் வருகின்றன. எனினும், கொள்கை ரீதியில் எடுக்கப்பட்ட முடிவு மாறாது.

அந்த நபர்தான் பொருளாதாரத்தை சீரழித்தார். தனது சகோதரராக இருந்தால்கூட அவரை அமைச்சுப் பதவியில் இருந்து ஜனாதிபதி நீக்கினார்' எனவும் நீதி அமைச்சர் குறிப்பிட்டார். (அ-ஒ-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடியாதுவிட்டால் பதவி விலகுவேன்!

## பதவி ஆசை இல்லையென பிரதமர் ரணில் தெரிவிப்பு



**கொழும்பு,மே 30**

**நாட்டு நிலைமையைச் சரிசெய்ய முடியாதுவிட்டால் பிரதமர் பதவியிலிருந்து விலகிவிடுவேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
மற்றவர்கள் போல் எனக்குப் பதவி ஆசை இல்லை. நாட்டின் நலன் கருதியே பிரதமர் பதவியை ஏற்றேன்.
அதேவேளை, ஜனாதிபதியின் வேண்டுகோளின் பிரகாரம் நிதி அமைச்சையும் பொறுப்பேற்றேன். நான் உறுதியளித்தது போன்று அனைத்து விடயங்களையும் நேரடியாகவே கண்காணித்து வருகின்றேன்.
சர்வதேச நாடுகளின் முக்கியஸ்தர்களுடனும், உதவிகள் வழங்கும் சர்வதேச நிறுவனங்களுடனும் பேச்சு நடத்தி வருகின்றேன். நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பிலும், எதிர்கால நிலைமை குறித்தும் உண்மைத் தகவல்களையே நான் வெளியிட்டு வருகின்றேன்.
எனது கருத்துக்கள் தொடர்பில் எவரும் பதற்றம் அடையத் தேவையில்லை. நாட்டை சரிசெய்வதே எனது குறிக்கோள் -என்றார். (சு-22)

## பொருளாதாரத்தை மீட்பதற்கு ரணிலுக்கு ஒத்துழையுங்கள்!

### சம்பிக்க கோரிக்கை

கொழும்பு, மே 30
பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் விடயங்களில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கோரிக்கை விடுத்துள்ளார்.
ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
இதற்கு முன்னரும் 2001ஆம் ஆண்டில் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது ரணில் விக்கிரமசிங்கவால் அதனை வெற்றிகொள்ள முடிந்தது.
இந்த முறையும் அவர் அதனை வெற்றி கொள்வார் என்ற நம்பிக்கை உண்டு.
அதற்கு அனைவரும் பிரதமர் ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இன்னும் இரண்டு மாதங்களுக்குள் இந்த நெருக்கடிகள் தீராது போனால் நாடு முழுவதும் பெரும் எதிர்ப்பு வெடிக்கும்- என்றார். (எ-22)

திருமாங்கல்யம் திருமண சேவை
திருமண வரன் தேடுபவர்கள் தொடர்புகொள்ளவும்.
thirumaangalyam.com
077 120 4651, 021 728 4433

JCB வாடகைக்கு விடப்படும்
காணி துப்பரவு, காடு அழிப்பு, மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தக்கூடிய JCB சாரதியுடன் வாடகைக்கு விடப்படும். (CS 1032) 1-6
077 353 3809, 077 071 3778




ரம்புக்கனை துப்பாக்கிச்சூடு

## களத்துக்கு அழைக்கப்பட்டு பொலிஸாரிடம் விசாரணை!

கொழும்பு,மே 30
ரம்புக்கனைப் பிரதேசத்தில் கடந்த மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸாரைக் களத்துக்கு அழைத்துச்சென்று விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
எரிபொருள் கோரி பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காயமடைந்திருந்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பாக ரம்புக்கனைக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்திரத்ன என்பவர் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அதன் பின்னர் சந்தேகத்தின்பேரில் மேலும் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் கேகாலை நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைவாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இந்தநிலையில் பொலிஸார் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில், அவர்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட இடத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளை நடத்தினர். (க-இ)

## போராட்டங்களை ஒடுக்கினால் எதிர்த்துப் போராடுவோம்!

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



கொழும்பு, மே 30
அரசாங்கத்தை எதிர்த்து ஆரம்பிக்கப்பட்ட காலிமுகத்திடல் மக்கள் போராட்டத்தைத் தடுத்து நிறுத்த முயற்சிக்கும் எவராக இருந்தாலும் அவருக்கு எதிராக குரல்கொடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது என்று நாடாளுன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-
காலிமுகத்திடலில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மக்கள் போராட்டத்துக்குள் இலங்கையின் அரசியல் கலாசாரத்தை மாற்றக் கூடிய சாதகமான பல அடையாளங்கள் உள்ளன. நாட்டின் அரசமைப்புச் சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய அடையாளங்கள், மக்களுக்குப் பொறுப்புக்கூறும் நாடாளுமன்றத்தை உருவாக்கும் அடையாளங்கள், நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்றும் அடையாளங்கள் எனப் பலவற்றைக் கூறலாம். அந்த அடையாளங்களை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம் - என்றார். (எ-இ)



மே 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால், அம்பாந்தோட்ட, சூரியவெள, தங்காலை ஆகிய பகுதிகளில் பாதிக்கப்பட்ட வீடுகள், வர்த்தக நிலையங்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான நாமல் ராஜபக்ச, டி.வி.சனக ஆகியோர் நேற்றுப் பார்வையிட்டனர். (க-இ)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில்
4 பரப்பு காணி விற்பனைக்குண்டு
நிலப்பரப்பு
❖ A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
❖ A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன்
❖ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
❖ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
❖ வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
பார்வையிடும் நேரம் :
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389, 077 241 7589

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 78 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
✔ A-9 வீதியில் இருந்து இரண்டாவது காணி 100M தூரம்.
✔ கைதடி வழி பிள்ளையார் கோயிலில் இருந்து 100M மீற்றர் தூரம்.
✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
✔ நன்னீரூற்று
✔ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம் 300 M தூரம்
✔ மூன்று வழிப் பாதை மேட்டு நிலம் கைதடி சந்தி 500 M தூரம்
✔ 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
✔ 1 பரப்பின் விலை 4 லட்சம்
✔ பார்வையிடும் நேரம் காலை 8 மணிமுதல் மாலை 6 வரை
தொடர்பு: 077 6234 204
077 2880 152
076 4365 814
(CS 1024) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.